பதிவு எண் M. 4900. 16-பக்கங்கள்.

குடி அரசு

நிறுவியது: 1924.

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0
வெளிநாடு ,, ரூ. 9-0-0 ,, 0-2-6.

லை 22 } ஈரோடு 27-8-1949 சனிக்கிழமை } மலர் 51.

பெரும் புரட்சி வேண்டும்!

★

"மனிதன் சுதந்தரமுடையவ
ாகப் பிறக்கிறான், ஆனால்
வன் எங்கணும் அடிமைத்தளை
ளில் பிணியுண்டு கிடக்கிறான்"
lan is born free, but every
here he is in chains
ன்றார் ரூசோ என்ற ஆசிரியர்.
க்களுக்குச் சுதந்தரம் இயற்கை
னது, தலையாயது; அடிமைத்
னம் விரோதமானது, கீழானது.
ன்றாலும், மேற்கூறிய ஆசிரியர்
ற்றினுக்கிணங்க எங்கணும் அதி
ம் சிறப்பாக நமது நாட்டில்
டிமைத்தனம் தலையாயும், சுதந்
ம் கீழாயும் காண்கிறோம்.

இதுவே "தலைகீழ்" என்பதா
ம்.

எனினும் நமது நாட்டைத் தெய்
க நாடென்றும், புண்ணிய பூமி
ன்றும் வாழ்த்திப் புகழ்கின்
ாம். இதந்தரும், சுதந்தரம்
ிரும் பிறநாடுகளை "இன்னல்
் பெருகிடும் மிலேச்சர்"
டென்றும், பாவபூமியென்றும்
கழ்ந்து நகையாடுகின்றோம்.
து தலைகீழ்ப் பாடமாகும்.
ய் வீச்சுத்தான் மிச்சம். தலை
ாச்சு என்ற பேச்சுக்கும்வகைச்
ம் ஆளாவதாகும்.

என்ன உளருகிறீர், பார்த்துப்
சும், என்ற குரல் கேட்கிறது.
சரி, உச்சி முதல் உள்ளங்கால்
ரை கூர்ந்து கவனிப்போம். நான்
ன்ன செய்வது? மனிதர் உச்சி
ாக, பாதம் மேலாகவல்லவோ
ரிகிறார்கள். ஆனால், என்ன,
ழும் தலைகீழாக (ஆதியி
ருந்து) பார்த்தால் சரியாய்ப்போ
கிறது. இப்பொழுது என்ன அதி
சயம். மனிதன் திரும்பவும் தலை
மேலாகவும், கால் கீழாக
வும் காணப்படுகிறான். இந்த
நிலையிலிருந்தே இவர்களைஆராய்
வோம்.

மக்கள் நாகரீகம் முதிராத
காலம் (ஞாபகம் தலைகீழ் ஆகை
யால் அநாகரீகம்) உள்ளதை உள்
ளவாறும், கண்டதைக் கண்டவா
றும், சொல்லும் காலம். அறி
யாமை, பயம் இவை ஆயிரம்
கதைகளையும் கற்பனைகளையும்
சிருஷ்டித்த காலம்.

இத்தகைய மக்களுடைய சிருஷ்
டிப் பொருள்களே, தெய்வங்
களும், வேதமும் ஆகும். இது
உண்மை, தலையைத் தலையா
கவே காணுவதாகும்.

நாட்கள் பல பல, வருடங்கள்
பல, நூற்றாண்டுகள் சில சில
கழிந்தன. மக்கள் படைத்த கட
வுளரே சகலத்தையும் படைத்த
பிதாவாக மாறுகிறார். பரம்பரை
யாக மக்கள் வாக்கில் வளர்ந்த வாக்
கியங்களோ, கடவுள் காட்டிய
வேதங்களாயின. இனிஎன்ன! மனி
தனுக்குவேலையில்லை. Fullstop
அவன்(கடவுள்) இன்றி ஓர் அணு
அசையாது. எல்லாம் தலைவிதி.
யாவும் அவரதுசெயல். மனிதன்
அறிவுக்கு வளர்ச்சியில்லை,தேவை
யில்லை, வேதங்களிற் காணாத
உண்மையில்லை விஷயமில்லை,
தலையில் அறிவில்லை. காலில்
நடமாட்டமில்லை.

ஏன்?

தலைகீழ்!

இந்தியர்களின் பூர்வீக கலை
வளர்ச்சி என்ன, சாஸ்திரங்கள்
என்ன, உபநிடதங்களென்ன,
அரும்பெரும் ஆராய்ச்சிகளென்ன?
ஆகவே இது வெறும் பழிச்
சொல்லே எனலாம். இதற்குத்
தான் தலை கீழாயிருப்பதை தலை
கீழாகவே பார்த்து வரவேண்டு
மென்பது. உள்ளங்கால் உயர
ஊசலாடுவதைக் கடைசியில் காண
லாமே. ஏன் அவசரம்?

மக்கள் இப்பரம்பரையாகப்
பாடம் படித்து வந்த வாக்கியங்
களிலேயே தாம் கண்டறியும் உலக
விஷயங்கள் அனைத்தையும் காண
வேண்டியதாயிருந்தது. என்ன
செய்வார்கள், எல்லாம் வேதத்தில்
உள்ளது. அறிவைச் செலுத்தி
னால் அனைத்தையும் காணலாம்
என்ற ஒரு கற்பனை செய்து
கொண்டனர்.

உடனே வேதங்களை விச்வ
ரூபமாக்கத் தங்கள் அறிவனைத்
தையும் செலவிட்டனர். தலை
வளர ஆரம்பித்தது. ஒவ்வொரு
உறுப்பாய் வளர்த்து கொண்டே
வந்தது. எத்தனை வேதங்கள்,
வேதாங்கங்கள், வேதாந்தங்கள்,
உபநிடதங்கள் என்ன அழகு! எத்
தனை சிறப்பு! ஆனால் வயிற்
றுக்கு வந்தது, வலியும் வந்து விட்
டது. பாவம் ஒரு சோற்று மூட்
டையை எத்தனை பேருக்கு எத்
தனை நாள் பங்கிடலாம்?

ஏசு கிறிஸ்து நாதர் ஒரு சில
மீன்களை ஆயிரக்கணக்கான

(தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)

ஆசையைத் தீர்க்கும் ஆருத்ரா?

நான் சிதம்பரத்திற்குப் புதிது. நண்பர்களின் உதவியினால் எனது புத்தகமொன்று சிதம்பரம் நாஷனல் பிரஸில் அச்சாகிக் கொண்டிருந்தது. ‘புரூப்’ பார்க்கச் சென்றிருந்தேன். அப்போ, சிதம்பரம் நடராஜமூர்த்தி கோவிலில் “ஆருத்ரா தரிசனம்”

அபாரமான கூட்டம். அன்று அச்சகம் அடைப்பு. மேலும், நான்கு கோபுரங்கள் நான்கு திசைகளிலும் வானை அளாவி நிற்கும் கூத்தப்பெருமானின் கோவிலைப் பார்க்கவேண்டுமென்ற நாட்டம் பெலமாக ஆட்டியது. உடனே என் சிதம்பரம் நண்பர் சிவானந்தத்தை என்னுடன் அழைத்தேன்.

சிவானந்தம் 22 வயதுள்ள இளம் எழுத்தாளர். நடத்தையில் மிகமிக நல்லவர். அழுத்தமான ஆஸ்திகவாதி!

அவர் வர மறுத்தார். ‘என்’ என்றேன்.

“எப்போதுமே எனக்கு கூட்டத்திற்குள் சென்று இடிபடப் பிரியமிராது. இன்றோ பெரியகூட்டம். உங்கள் பேனாமுனையால் வர்ணிக்க முடியாத அளவுக்கு இன்று கூட்டம் இருக்கும். உங்கள் ஊர்ப்பக்கம் ஒரு தாட்டுக்குள் 12 துலாம் பருத்தியை அடைவதைப்போல, இன்று கோயிலினுள் லட்சக்கணக்கான ஜனங்கள் அடைந்துகொண்டு போகவும் வரவும் இருப்பார்கள். எங்கள் ஊரில் ‘ஆருத்ரா தரிசனம்’ என்றால் அவ்வளவு பெரிய விசேஷம்” என்றார்.

அப்படியானால் நான் இந்த ஊருக்கு வந்த நேரம் நல்ல நேரம்தானோ? இப்படிப்பட்ட விசேஷத்தைத்தானே பார்க்கவேண்டும்” என்று சொல்லிக்கொண்டே விருப்பமில்லாத அவரை பிடித்துப்பலவந்தமாக இழுத்துக்கொண்டே கோவிலுக்குச்சென்றேன். பேசிக்கொண்டே கோவிலின் பிரகார வாசலுக்கு வந்துவிட்டோம். கூட்டத்தைக் கண்டு உண்மையிலேயே பயந்துவிட்டோம். எனவே இருவரும் ஒரு தீர்மானம் செய்தோம்.

நாம் எந்த இடத்தில் பிரிந்தாலும் ஒருவரை ஒருவர் தேடித்திரியவேண்டாம். இருவரும் சேர்ந்தே போகவும் முடியாது. ஆகையால் இஷ்டம்போல் சுற்றிவிட்டுக் கடைசியில் இந்த வாசலுக்கு வந்துவிடவேண்டும்” என்பது தான் எங்கள் தீர்மானம்.

இருவரும் ஒன்றாகவே உள்ளே நுழைந்தோம். நடராசமூர்த்தியையும் சிவகாமி சுந்தரி அம்பாளையும், பயத்தினாலும், புத்திபூஜ்யத்தினாலும் உருவான பாட்டாளிகளிடம் பரமன் வேஷம் போட்டுத் தட்டிப்பறித்த காசைச் சேர்த்துச் சேர்த்து நவரத்தினக்கற்களிழைத்த ஆபரணங்களாலும், தொழிலாளிகள் தொடையை மூடிக்கொள்ள துணி கிடையாது தொல்லையுறும்போது, பட்டாடைகளாலும், அழுத பிள்ளைக்கு அரையணாவுக்கு பூ வாங்கிக் கொடுக்கமுடியாது அல்லலுறும்போது வீணாக வண்டிவண்டியான புஷ்ப ஹாரங்களாலும் அலங்கரித்து, ஆயிரக்கால் மண்டபத்திலிருந்து (ராஜசபை) மூலஸ்தானத்துக்கு (சித்சபை) ஊர்வலமாக எடுத்துச் செல்லும்போதுதான் ஏகப்பட்ட கூட்டம். அப்போதுதான் இருவரும் பிரிந்துவிட்டோம்.

கோவிலினுள் பார்க்கும் ஒவ்வொன்றைப்பற்றியும் பகுத்தறிவோடு குழப்பி சிந்தித்தவண்ணம், கூட்டம் போகும் போக்கெல்லாம் போனேன். எல்லோரையும்போல் அம்பிகையின் சந்நிதானத்தில் நின்று அர்ச்சனை செய்யவில்லை. ஆனால்......... அம்பிகையை நன்கு ஆழ்ந்துபார்த்து ஆராய்ச்சி செய்தேன். தொந்தித் தடியர்கள் கூழைக் கும்பிடுபோடுவதைக் கண்டு பக்திப் பரவசத்தில் தாமரைமொக்கைப்போல் என் கை குவியவில்லை. ஆனால்...... கூட்டத்திலுள்ள தரித்திர நாராயணர்களைத் தன்னையறியாமல் எண்ணிக்கொண்டிருந்தது என் கை. பிரார்த்தனையில் ஈடுபடுவதற்குப் பதில் பலரைப் பிச்சைக்காரர்களாக்கிய பிராமணக் கூட்டங்களை எண்ணிக் கணக்குப்போட்டுக்கொண்டிருந்தேன்.

காலணாவுக்கு இஞ்சி வாங்கிக் கஷாயம் சாப்பிட்டிருக்காத கூலிகளின் காசைக்கொண்டு வாங்கிய சாம்பிராணி, சூடம், ஊதுவத்தி இவைகளிலிருந்து கிளம்பியபுகைகளையும், மூலவிக்ரகங்களில் சாத்தியிருந்த மலைமலையான மலர்மாலையினின்றும் கிளம்பிய அலை அலையான வாசனையையும் தோற்கடித்துவிட்டது, மனிதக் கூட்ட நாற்றமும், வௌவால் எலி, புறா முதலியவற்றின் புழுக்கைகளின் நாற்றமும். ஆகையால் என்னால் அங்கு அதிகநேரம் மூக்கைப்பிடித்துக்கொண்டும், மூச்சுவிட மறந்துகொண்டும் இருக்கமுடியவில்லை. நண்பரிடம் கூறியிருந்த பிரகார வாசலுக்கு நேரே வந்துவிட்டேன்.

இவ்வளவுநேரம் யோசித்து மூளையைக் குழப்பிக்கொண்டதால், சிக்குப்பிடித்த சிந்தனைக்கு, இனியாவது சற்று நேரம் ஓய்வு கொடுக்கலாம் என்று சிந்தித்து, வாசலின் முன்னால் மேற்குப்பார்த்து நின்றுகொண்டிருந்தேன்.

அய்யோ, சிக்குப்பிடித்த என் சிந்தனை மேலும் மேலும் கொதிப்படைந்து சன்னிகண்டு செத்துப்போகவே ஆரம்பித்துவிட்டது.

பிரகாரத்தில் நான் கண்ட பரிதாபகரமான கோரக்காட்சி! அய்யோ...... அய்யோ......ஓலமிடும் ஒற்றைக்காலன் ......இரைச்சலிடும் இரண்டு கண்ணுமில்லாத கபோதி...பொருமிப் பொருமிப் புலம்பும் பெரும் வியாதிகொண்டவன்...வேதனை தாங்காது வீறிட்டழும் வெண்குஷ்டம் பிடித்தவன்...... இரும்பு இதயத்தையும் இளகச்செய்யும் இரண்டுகையுமில்லாதவன்...கண்ணால் காணச்சகிக்காக நொண்டி...... எண்ணெயே கண்டறியாத எலும்பும் தோலுமாய்க் காணும் அரைநிர்வாண ஸ்திரீ...புலாலைக் கக்கிக்கொண்டிருக்கும் புண்களுக்கு எண்ணெயின்றி கண்ணீரோடு பிரகாரத்தில் புரண்டுகொண்டிருக்கும் பிச்சைக்கார வியாதியஸ்தன்...தாயிடம் பால் இன்றிச் சொரிநாய்க் குட்டிபோல் வளர்ந்த குழந்தை....மானத்தை மறையாது—மடையர்களுக்கு மானம் வாட்டும் என்று மல்லாந்துகிடக்கும் மாது... இன்னும் இதுபோல் அலறிக்கொண்டிருக்கும் ஆயிரமாயிரம் அங்கஹீனர்கள்.........

ஆனால் அதே நேரத்தில் அந்தப் புண்ணுக்கு எண்ணெயில்லாத அந்தப் பெரும் வியாதியஸ்தனைப்பார்த்து ஏளனப்புன்முறுவல்செய்துகொண்டே கோவில் தீபத்துக்கென வெள்ளிக் கிண்ணத்தில், நெய்யும் எண்ணெயுமாகப் பலர் கொண்டுபோனார்கள். கோவிலிலோ லட்சக்கணக்கான தீபங்கள் ஜகஜோதியாய் எரிந்துகொண்டிருக்கின்றன. அதே நேரத்தில் எண்ணெயின்றி ஆயிரமாயிரம் வீடுகளில் கும்மிருட்டு.

ஒரு பழத்திற்காகப் பல்லிளித்துக்கொண்டிருக்கிறது, ஒரு பஞ்சையின் பச்சிளங்குழந்தை — அதன் உயிர்கூட அப்பழத்தோடு பின்னப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் குழந்தைக்குப் பழம் கிடைக்கவில்லை. அதே நேரம் அர்ச்சனைக்கென்று தேங்காய் பழம் ஆயிரமாயிரம் ஆஸ்திகப்பேர்வழிகள் கொண்டுபோய்க்கொண்டிருந்தார்கள். இந்த அர்ச்சனை

(தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க)

மத மாயை

கொக்கோ சண்டைப்படங்களிலே நடிக்கும் போது நாமும் சேர்ந்து நடிப்பது போல் இல்லையா? குறிப்பாக இளைஞர்கள் உள்ளம் கொக்கோமாற்றார்களால் மடக்கப்படும்போதும், பிடிக்கப் படுந்தோறும், துடியாத்துடிக்கும். அவர்களே பிடிபட்டு விட்டதைப் போல எண்ணுவார்கள். திடீரென கொக்கோ, மாற்றார் கையினின்று விடுபட்டதோடல்லாது அவர்களை அடித்து விரட்டும் கட்டம் வரும், அப்பொழுது சினிமாப்பார்க்கும் இளைஞர்களும் சேர்ந்து அய், அய், என ஆர்வக்குரலிட்டு குதூகலிப்பார்கள். திடீரென ஆட்டத்தின் இடைவேளைவரும். சோடா, கலர், கடலைப்பருப்பு, ஜெயக் கொடி பாட்டுப்புத்தகம் இரண்டணா, என்ற விற்பனையாளர்களது குரல்கள் போட்டியிட்டுக் கொண்டு கிளம்பவே, இளைஞர்கள், சினிமாவுக்கு வந்துள்ளதாகவும், நடந்த சண்டைகளெல்லாம் சினிமாவில்தானென்றும் உணர்கிறார்கள். அது இயற்கை. நடிப்பிலே, கதையின் விறுவிறுப்பிலே ஆழ்ந்ததினால் ஏற்பட்டதின் விளைவு அது. இளைஞர்கள் உள்ளம் ஆகவே பிற உண்மைகளை அது போழ்து எண்ண முடிவதில்லை. ஆகவே இந்த நிகழ்ச்சியில் நமக்கு வியப்பில்லை. சினிமா ஆட்டத்தின் இடைவேளை நேரத்தில், வெட்ட வெளிச்சத்தில், வெள்ளித் திரையைக்காணும் போது, ஒருவன் "ஜெயக் கொடியை மடையர்கள் பிடித்துக் கொண்டார்களா? விடுவதா அவ்வீணர்களை, கிளம்புங்கள், கிளர்ச்சி செய்யுங்கள்" என்று சினிமாக் கொட்டகையில் கூறினால், நாம் என்ன நினைப்போம் அவனைப் பற்றி? ஏதோ மூளைக்கோளாறு அவனுக்கு, என்றுதானே எண்ணுவோம். அதுமட்டுமா, நம்மோடு அவன் இருக்கத் தகுந்தவனில்லை, அவனை இடமாற்றுங்கள் என்றும், கூறத்தானே வேண்டி வரும். அப்படிக்கூறாது, அவனே கலைஞன், எழுச்சி வீரன், என்று கொண்டாடி, 'அவன் புகழ்பாடுவோமே' என்று பள்ளுப்பாடுவோமா?

மேற்சொன்னபடி அறிவுக் கொவ்வாத அடாத செயல்கள் அனேகம் இத்துரதிர்ஷ்டமிகுந்த நாட்டில் நடந்துதானிருக்கிறது. அவ்வாறு அறிவு வழிமாறியவரை, சூழ்ச்சிக்காரர்கள் கூடி ஆழ்வாராக்கியிருக்கிறார்கள். அவருக்குக் கோயில் கட்டியிருக்கிறார்கள். அவர் பெயரால் ஊரும் கண்டிருக்கிறார்கள்.

குலசேகர் சேரமன்னன், திடவிரதர் என்பாரின் ஒரே புதல்வர். மன்னர்களுக்கு வேண்டிய, 'சஸ்திர, சஸ்திரப் பிரயோகங்களில்' தேர்ச்சி அடைந்தவர். சோழ, பாண்டிய மன்னர்களைவென்று ஆளும் மண்டலத்தை மலைக்குமளவு அதிகப்படுத்தியவர். சிறந்த விஷ்ணு பக்தர். அவர்தான் "ஜெயக்கொடி பிடிபட்டாள் புறப்படுங்கள் போருக்கு" என்றுகூறும் அறிவிலி பட்டியலைச் சார்ந்த ஆசாமி ஆவார்.

ஒருநாள் குலசேகரின்முன்னால் ராமாயணம் படித்து விளக்கவுரை கூறிக்கொண்டிருந்த பண்டிதர், "ஸ்ரீராமர் காட்டில் கரன், தூஷணன் முதலிய அரக்கர்களுடன், யுத்தம் செய்யும் நிமித்தம் தாம் ஒருவராகவே சென்றார்" என்று விவரித்துச் சொன்னார். ஸ்ரீராமரிடம் அன்புமிகக் கொண்ட, குலசேகரர் கதையில் ஈடுபட்டவராய், முன்னாட்களில் நடந்த ஒரு சம்பவத்தை, கதையில் பண்டிதர் கூறுகிறார் என்பதை மறந்து, ஸ்ரீராமர் அப்போதுதான், தனியே, யுத்தத்திற்குச் செல்வதாகக் கருதி உடனே எழுந்து, "அடடே! ஸ்ரீராமருக்குத்துணையில்லையா? தனியாகவா செல்கிறார்? எல்லோரும் புறப்படுங்கள்" என்று தம் வீரர்களைக்கூவி அழைத்துக் கொண்டு புறப்பட்டாராம். அவரைச் சூழ்ந்திருந்த அமைச்சர்களும், பிரபுக்களும் இன்னதுதான்செய்வதென்று தெரியாமல் தயங்கினார்களாம். புராண பண்டிதர் அரசரது மனோபாவத்தைபறிந்தவராய், "உடனே ஸ்ரீராமர் அரக்கர்களை அடியோடு அழித்து விட்டு, வெற்றி வீரராய்த் திரும்பினார்" என்று புத்திசாலித்தனமாகக் கதையை முடிக்கவே, குலசேகரர் களிப்புடன் திரும்பி ஆசனத்திலமர்ந்தாராம். அன்றையிலிருந்தே புராணப் பண்டிதர் ஸ்ரீராமருக்கு கஷ்டமேற்படும் இடத்திலெல்லாம் அதிகமாய் விவரிக்காது, எச்சரிக்கையோடு, கதை சொல்லி வந்தாராம். மற்றோர் நாள் பழைய பண்டிதர் தான் வர முடியாததால் பதிலுக்கு வேறோர் புதுப்பண்டிதரை அனுப்பினாராம். அவர் அரசர் மனோபாவத்தை அறியாதவர் ஆகவே, சீதையை இராவணன் தூக்கிச் சென்ற பாகத்தை, கேட்டவர் மனம் உருகும்படி வெகு சாதுர்யமாக வர்ணித்தாராம். குலசேகரர், இது கேட்டு உளமுடைந்து கடலைக் கடந்து இராவணனைக் கொன்று சீதாப்பிராட்டியாரை மீட்டு வரும் பொருட்டு, பரபரப்புடன் எழுந்து தமது படைகளைத் தம்பின்னே வர பணித்து விட்டு, தாம் முன்னால் போகும் பொருட்டு வேகமாய் ஓடி கடலில் தடதடவென்று இறங்கி நடக்கலானார். அவரது திட புத்தியைக்கண்ட பரமாத்மாவின் திரு அவதாரம், பாற்கடலில் பள்ளிகொண்டவனின் மறுபதிப்பு, மாதா சீதாப்பிராட்டியின் மணவாளன், ஸ்ரீராமர் தன் குடும்பசமேதராய், குலசேகர மன்னன் முன் தோன்றி, "அன்பனே! உன் திட சித்தங்கண்டு மெச்சினோம். இராவணனைக் கொன்று சீதையை மீட்டுக்கொண்டு திரும்பினோம்", என்று திருவாய் மலர்ந்தருளியதோடல்லாது, இன்னும் கொஞ்சகாலம் இப்பூவுலகில் தங்கி நம் பெருமை பரவ புகழ்பாடி, பக்தர் குழாம் ஏற்படுத்தி விட்டு நம்மை வந்து அடைவீரெனக்கூறி மறைந்தாராம். அய்யன் அறிவித்ததற் கொப்ப அடியாரும் அப்படியே அரியின் பெருமை பாடி, ஸ்ரீரங்கம் போன்ற நாமதாரிக் கோயில்களுக்குச் சென்று சேவித்து, திருமொழி பாடி திருமால் திருவடி நிழலை அடைந்தார் என்பது அடியார்கள் கூறும்புராணம். கதை கேட்டுக் கட்சி திரட்டும் திடசித்தன் திடவிரதரின் கோணப்புத்தி கோமாளி குலசேகரரை, ஆழ்வாராக்கி விட்டார்கள் அந்தகர்கள். அவர் பெயு

சிந்தனை அலை!

"பெரியார்—மணியம்மை திருமணம். ஆம்! தலைவர் பெரியார்-மணியம்மை திருமணம் தான்! ஏன் தலைவர் பெரியார் திருமணம் செய்தார்? எதற்காகச் செய்தார்? என்ற சிந்தனையில்லை! ஆராயவில்லை; யோசிக்கவில்லை மக்கள் இல்லை, யோசிக்கவிடவில்லை. கூடிக்குடிகெடுக்கும் 'மணி' வர்க்கத்தினர்கள். "பெரியார்-மணியம்மை திருமணம்" என்றவுடனே, அவசரப்பட்டனர்! ஆத்திரப்பட்டனர்! கோபப்பட்டனர்! கனல் கக்கினர்! இல்லை, அவ்வாறெல்லாம் செய்யும்படி தூண்டப்பட்டனர். பேனா முனைகளைத் தீட்டி, கூர்படுத்தினர்! ஏடு எடுத்தனர்! கண்களைக் கசக்கினர்! துடைத்தனர்! எழுதத் தொடங்கினர் வசை மாரிகளை.

கற்றோரையும்—மற்றோரையும் மதிமயக்கினர். மக்கள் மயங்கினர்—மக்கள் உண்மை என்று நம்பினர். பின் மோசம் அடைந்தனர் "அந்த" நாசகாரர்களால். இதோ! "கண்டனச் சொற்களின் சொகுசைப் பார்! "கண்ணீர் துளிகளின் கணக்கைப்பார்" என்றெல்லாம் தீட்டினர்! பசப்பினர்—ஏமாற்றினர்!

எப்படி எப்படி வசைமாரிகளை அள்ளி அள்ளி வீசினார்களோ? அவர்கள் தான் பெரியார்—மணியம்மை திருமணத்தைக் கண்டு கண்ணீர் வடித்தார்களாம்? வேதனைப் பட்டார்களாம்? விரட்டப்பட்டார்களாம்? ஏன் கலங்கினார்கள்? ஏன் வேதனைப்பட்டார்கள்? உண்மையாக விரட்டப்பட்டார்களா? அல்லது பிரிந்து விட்டார்களா? சிந்தித்தார்களா? திருமணத்தைப்பற்றி. கழகம் திருமணத்தைப் பற்றிக் கைக் கொண்ட திட்டமென்ன? என்ன சொல்லி வந்தோம்? என்ன சொன்னோம்? நினைப்பில்லை, சிந்திக்கச் சிறிதளவாவது நேரமில்லை. பழைய ஏடுகளை-நடைமுறைகளைத்-திட்டங்களை, அல்லது பேசியவற்றையாவது சிந்தித்துப் பார்த்தீர்களா? ஐயமிருப்பின் கேட்டீர்களா?

ஐயமிருப்பதென்பது தவறு! ஐயமிருக்க இடமில்லை. பின் ஏன்? எதற்காகப் "பொருந்தாமணம், பொருந்தாமணம்" என்று தப்பட்டை அடிப்பானேன்? வாய்போக்கு ஒன்று, எழுத்துப்போக்கு ஒன்று; நடத்தை ஒன்று. இன்னும் தெளிவாகச் சொல்லவேண்டுமேயானால் வாயிலேயிருந்து வந்தவற்றைக் கொட்டுவது ஒன்று, எழுதுவது ஒன்று; ஆனால் பேசுவதைப் போலவும்—எழுதுவதைப் போலவும் இருக்காது நடத்தை. ஆனால் "சூழ்ச்சி ஓடையிலே" மிதக்கின்றார்கள்.

இவர்கள்தான் கூறுகிறார்கள் "பெரியார் — மணியம்மை திருமணம் பொருந்தா மணம்' 'ஆகவே அது கூடாது. ஒதுக்க வேண்டியது. அகற்ற வேண்டியது. அறிவுக்கு மாறுபட்டது', எனவே நாங்கள் ஏற்கமாட்டோம்! விலகி நிற்கிறோம்' என்று பத்திபத்தியாத் தீட்டுகிறார்கள்! இந்தப் போலி நடிப்பு நடித்தவர்கள், போலி பற்றுதல் கொண்டவர்கள். ஆனால் பேசுவார்கள், எழுதுவார்கள் நடந்துகாட்ட மாட்டார்கள்! துரோகம் செய்வார்கள்; சூழ்ச்சி செய்வார்கள்; இவர்களின் போக்கைப்பற்றி சிந்திக்க வேண்டும்.

பல பல ஆண்டுகளாக, பல பல கூட்டங்களிலே, மாற்றார்கள் விடுத்த கேள்விகளுக்கு விடையளித்தோம். எழுதினோம்! கருத்தற்ற கயவர்களின் கண்டனைகளுக்கு விளக்கம் கொடுத்தோம்! இன்று கூறுகிறார்கள் 'பெரியார்—மணியம்மை திருமணம்' 'பொருந்தாமணம்' என்று. ஆகவே 'விவாகரத்து' செய்ய வேண்டுமாம். இது எப்படியிருக்கிறது பாருங்கள்! முதலில் பொருந்தாமணம் என்று கூறியதே அறியாமை! அது செய்ததுமட்டும் போதாதென்று, அதை விளக்க மற்றொரு குற்றமும் செய்கிறார்கள்! மற்றொரு அறியாமையையும் வெளிக்காட்டிக் கொள்கிறார்கள்! எப்படி எனில் பொருந்தா மணம் என்று சொன்னது, எழுதியது முதற் குற்றம்! விவாகரத்து செய்யவேண்டும் என்று சொன்னது எழுதியது இரண்டாவது குற்றம்! ஒன்றை விளக்குவதாகக் காட்டி, மற்றொரு அறிவற்ற சொல்லை இவ்விடத்தில் விளக்குவது அறியாமையேயாகும்! என்னமோ? எப்படியோ எழுதுகிறோம்—பேசுகிறோம் என்று இந்த வம்பர்கள் பிடிவாதம் செய்வது தவறு.

என்னப்பா! கூறினோம். திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகள் ஒருவரோடு ஒருவர் பழகியிருந்தாலும், அன்பு கொண்டிருந்தாலும், ஒருமனப்பட்டிருந்தாலும், இருவரும் நல்வாழ்வு நடத்துபவர்களானாலும், அறிவாளிகள் ஆனாலும், வயது வித்தியாசமாகயிருந்தால் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று சொன்னோமா? எங்கு சொன்னோம்? எப்பொழுது சொன்னோம்? அல்லது எங்கு சொன்னீர்கள்? எப்பொழுது எழுதினீர்கள்? ஆதாரம் உண்டா? பின் எழுதுகிறீர்களே பக்கம் பக்கமாகப் "பொருந்தாமணம், பொருந்தாமணம்" என்று.

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

ரால் குலசேகரப்பட்டினத்தையும் கண்டு விட்டார்கள். மன்னன் என்று அழைக்கப்பட வேண்டியவர், மாபக்தர் ஆகி விட்டார். சோழ, பாண்டியர்களை வென்ற வீரர் என்று வரலாற்றிலே வாய்ப்புப்பெறவேண்டியிருந்தவர், நிலை விழந்த நடிப்பிலே, படைசென்ற பரம பக்தர் என்று பக்திப்பாசுரங்களிலே இடம் பெறவேண்டியவரானார். குலசேகராழ்வார் குணாதிசயத்தை—கதை கேட்டு கலகஞ் செய்த கயமையை—கருத்திழந்த கண்மூடி வெறியாட்டத்தைக்கதையாக்கி, பள்ளிப்புத்தகங்களிலே பாடங்களாக்கிப் பச்சிளங்குழந்தைகளை பழமைப்படுகுழிகளிலே தள்ளுகிறார்கள், 'தான் வாழத் தமிழ் கற்றுக்கொண்டகேடர்'. குலசேகரருக்குப் பண்டிதப் பார்ப்பான் இராமகாதை வர்ணித்த முறையிலே பள்ளிகளிலே பகுத்தறிவுக் காலக்குழந்தைகளுக்குப் பண்டிதர்கள் குலசேகர ஆழ்வார் கதைகளைப் போதிக்கிறார்கள். ஏன்? இன்னும் குலசேகர ஆழ்வார்களையும், சகோதரத்துரோகி விபீஷண ஆழ்வார்களையும் உண்டாக்கத்தான். என்று மறையுமிந்த மறையவர் மாக்கதை?

—அழகப்பா.

நடப்பும் நாட்டமும்

"சார் காலணாவுக்கு

தீக்குச்சி கொடுங்கோ''

"இந்தாங்கோ காசை எடுங்கோ'' "என்ன சார் காலணாவுக்கு அய்ந்தே அய்ந்து குச்சியா?''

"ஏன் சார் இந்தத் தொல்லை, ஒரே முழுப் பெட்டியாத்தான் வாங்கிக்களேன். ஒண்ணரையணா எடுங்கோ''

"அது சரி இந்த தீக்குச்சி என்ன மார்க்கு தீக்குச்சிங்க''

'மார்க்கு எல்லாம் எதுக்குசார்! ஏதோ தீக்குச்சியா, இல்லையா? இதுதானே ஒங்களுக்கு''

"என்னங்க இது. நீங்க கொடுத்த பெட்டியிலேயே ஒரசி ஒரசிப் பார்க்கிறேன். ரெண்டு குச்சி வீணாப்போச்சு. நெருப்புப் பொறியைக்கூட காணோமே.

"இதுக்கு நானென்னசார் செய்யறது. நாங்க என்ன ஒரசிப்பாத்தா விலைக்கு வாங்கினோம். எங்களுக்கு வர்றதே அப்படியிருக்கு. நான் என்ன தண்ணியிலேயா ஊற வைச்சுட்டேன், நீங்களே சொல்லுங்கசார், அப்படிச் செய்யறதிலே எனக்கு என்னலாபம்?''

* *

இந்த உரையாடல் எனக்கும் ஒரு பெட்டிக் கடைக்காரருக்கும் நடந்ததாக்கும் என்று நினைத்துக் கொள்ளப் போகிறீர்கள், அப்படி ஒன்றுமில்லை! இன்னும் அந்த நிலைமை வரவில்லை. ஆனால் இப்போது வந்திருக்கிற இந்த 2 வருஷத்துச் சுயராஜ்ஜியம், 3, 4 வருஷம் என்று சொல்லப்படுகிற போது இந்த நிலையை நம் நாட்டில் கண்குளிரக் காண்போமானால் அது ஒன்றும் ஆச்சரியமில்லை என்று சொல்லாமல் சொல்லுகிறார்கள் சாத்தூர் சிவகாசித் தோழர்கள்.

வருஷத்தில் 6½ கோடி ரூபாய்

மத்திய சர்க்காருக்கு வருமானம் ஆகிக்கொண்டிருக்கிறது தீப்பெட்டித் தொழிலில். வருமானத்தைப் பார்த்தாலும் இதை ஒரு அற்பம் என்று தள்ளிவிட முடியாது. மேலும் சமுதாயத்தில் உள்ள எல்லாத் தரத்தினராலும்— உப்புக்கு அடுத்தபடியாகப் பயன்படுத்தப்பட்டும் வருகிறது. அப்படியெல்லாமிருந்துங்கூட, இந்தத் தொழிலை அலட்சியப்படுத்தி எங்கள் வயிற்றில் மண்ணையடிக்கிறார்களே சர்க்கார் என்பதாகக் குய்யோ முறையோ என்று கதறுகிறார்கள் அவ்வூர்களிலுள்ள 20000 தொழிலாளிகள்.

விஷயம் இதுதான்.

இந்துஸ்தானம் முழுவதிலும் சுமார் 200 தீப்பெட்டித் தொழிற்சாலைகள் உண்டு. இந்த 200 தொழிற்சாலைகளில் சிவகாசி, சாத்தூர் என்கிற இரண்டு தென்னாட்டு ஊர்களில் மட்டும் 90 தொழிற்சாலைகள் இருக்கின்றன. தீக்குச்சி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் "போடோஷியம் குளோரைட்'' இறக்குமதிச் சரக்கு. டாலர் மிச்சத்திற்காக அதாவது இந்துஸ்தான் முதலாளிகளின் லாப வேட்டைக்காக அல்லது இந்த நாட்டில் இயந்திரத் தொழிலைப்பெருக்க, இயந்திரங்கள் வரவழைக்கவேண்டுமென்கிற பெயரால் போடாஷியம் குளோரட் இறக்குமதிக்குத் தடை போடப்பட்டிருக்கிறது. தீக்குச்சி உற்பத்திக்கு மிக மிக அத்தியாவசியமான இதற்குத் தடை போட்டுவிட்ட காரணத்தினால், 90 தொழிற்சாலைகளில் 60 தொழிற்சாலைகள் கதவை இழுத்துப்பூட்ட வேண்டியதாய்விட்டது. இந்த 60 தொழிற்சாலைகளை நம்பி 20 ஆயிரம் தொழிலாளிகள் -ஆண், பெண் சிறுவர்கள் வாழ்க்கை நடத்திவந்தார்கள். இனிமேல் அத்தனை பேரும், 'கள்ளிறக்கிய தொழிலாளிகள்' எந்த நிலையை அடைந்திருக்கிறார்களோ அந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டுவிட்டனர். இது மட்டுமல்ல.

மேலே காட்டிய உரையாடல்

நாட்டில் சர்வ சாதாரணமாய் நடந்தாலும் நடக்கலாம். இந்த இறக்குமதியைத் தொடர்ந்து சர்க்கார் தடைப்படுத்தி விடுவார்கள் என்றால், நாட்டில், ஏழை மக்களால், பெட்டியாக வாங்கப்படுவது போய் குச்சியாக வாங்கப்படுவதும், குச்சி காலணாவுக்கு அய்ந்து, ஆறு என்கிற விதத்தில் விலை ஏறிப்போய் விடுவதும், இவ்வளவு விலை ஏறியும் அதில் ஒன்றுக்கு முக்கால் பயன்படாமல் போய் விடுவதும் சர்வ சாதாரணமாகப் போய்விடும். இந்த சுயராஜ்ஜியத்தில் 2 வருஷ அனுபவங்கள் நமக்கெல்லாம் கற்றுத்தந்திருக்கும் பாடங்களில் ஒன்றுதான் இது.

யாருக்கு ஆசை?

இந்த மாதிரியான ஒரு நிலைமை, இருப்பதெல்லாம் போதாதென்று, வரத்தான் வேண்டும் என்று யாராவது ஆசைப்பட முடியுமா? நாம் ஆசைப்படாவிட்டாலும் "உங்கள் தலையில் எழுதின எழுத்தை—அதாவது உங்களுக்கு இப்படி. இப்படித்தான் நடக்க வேண்டும் என்று நாங்கள் எழுதி வரும் எழுத்துக்களை யாரால்தான் அழித்துவிட முடியும்? அன்றைக்கே நாங்கள் எழுதி விட்டோமே! அதை யாரால் அழித்தெழுத முடியும்?'' என்று கேளாமல் கேட்கிறது மத்திய சர்க்கார்.

ஆனால் இன்னொரு புறத்தில் சொல்லிக்கொள்கிறது, இந்த மத்திய சர்க்கார், தீக்குச்சித் தொழிலை அபிவிருத்தி செய்யப் போகிறோம் என்று. அந்தமான் தீவுகளிலிருந்து தீக்குச்சிக்கு வேண்டிய மரவகைகளை சப்ளை செய்ய, என்னென்ன மார்க்கங்களுண்டு என்கிறதாக யோசித்து வருகிறார்களாம் மத்திய சர்க்கார்.

இந்த இரண்டும்

உண்மையாயிருக்க முடியுமா? ஒருபுறம் தீக்குச்சிக்கு வேண்டிய மருந்து இறக்குமதிக்குத் தடை! அதனால் தென்னாட்டில் 60 தொழிற்சாலைகள் கதவடைப்பு! 20 ஆயிரம் தொழிலாளிகளுக்குத் திண்டாட்டம்! இன்னொருபுறத்தில் தீக்குச்சி செய்வதற்கு வேண்டிய மரவகைகளை எந்தெந்த அளவில் கொண்டு வந்து குவிக்கலாம் என்பதற்குத் திட்டம்! இந்த இரண்டும் எப்படி உண்மையாய் இருக்க முடியும்? இருந்தாலும்

இரண்டும் உண்மைதானாம்.

காமராஜர்கள் சொல்லட்டும்

வடநாடு—தென்னாடு என்று பேசுவது முட்டாள்தனம், வைத்தியக்காரத்தனம் என்றெல்லாம் உளறிக் கொட்டி, அறிவுச் சிகாமணிகள் என்கிற பட்டத்தை அள்ளிக் கட்டிக் கொள்கிற காமராஜர்கள் இதற்கு என்ன சொல்லுவார்கள்? இந்த ஒரு சிறு தொழிலில்தான் வடநாட்டோடு சரிசமானமாகப் போட்டி போட்டு, தென்னாடும் வளர்ந்திருக்கிறது என்கிற பொறாமையினால்தான், இந்தத் தொழிலைப்பற்றி மத்திய சர்க்கார் கவனிக்கவில்லை — ஆதரவு காட்ட முன்வரவில்லை என்று பேசப்பட்டால் அதிலென்ன தவறு? தென்னாட்டுத் தீக்குச்சித் தொழிற்சாலைகளை மூட வைத்து, வடநாட்டில் அவற்றைப் பெருக்குவதற்காகத்தான் அந்தமானின் மர இறக்குமதிகளுக்கு அக்கறை காட்டப்படுகிறது என்று பேசப்பட்டால் அதிலென்ன தவறு? தென்னாட்டுத் தொழிற்சாலைகளுக்கு மட்டும், மருந்து கிடைக்கவில்லை என்கிற சப்தம் பலமாகக் கேட்கப்படும் இந்த நேரத்தில், வடநாட்டிலிருந்து அப்படி ஒரு சிறு சப்தமும் உண்டாகாதிருக்கக் காரணமென்ன வென்று கேட்கப்பட்டால் அதிலென்ன தவறு? 20 ஆயிரம் தொழிலாளிகள் இப்போதைக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரிந்தும், இந்த நாட்டுத் தேசிய எதிகள் எல்லாம் கைகள் கட்டப்பட்டது போலிருக்கிறதே, 4 பார்ப்பனர்களுக்குப் பாதகம் ஏற்பட்டிருந்தால் அப்படியிருந்து விடுமா என்று கேட்கப்பட்டால் அதிலென்ன தவறு? இவைகளுக்கு காமராஜர்கள் என்ன சொல்லுவார்களோ?

மத்திய மாகாணத்தில்

ஒரு பெரிய சீர்திருத்தம் என்று தேசியத்தாள்கள் கூறுகின்றன. மத்திய மாகாணம், இந்திமொழியைத் தாய் மொழியாக உடையவர்களை—இந்தி ஏகாதிபத்திய வெறியர்களைப் போதுமான அளவுக்குக் கொண்டிருக்கும் ஒரு மாகாணமாகும். இந்த மாகாணச் சட்டசபையில், இந்திமொழியையோ, மராத்தி மொழியையோ தெரிந்து கொள்ளாத வேற்று மொழிக்காரர்கள் 12 பேர் உறுப்பினர்களாய் இருக்கிறார்களாம். அப்படியிருந்தும் இனிமேல் சட்டசபை நடவடிக்கைகள் எல்லாம், கேள்வி கேட்பது பதில் சொல்வது உட்பட, இந்தியிலும் மராத்தியிலும் தானாம். ஆங்கிலம் அறவே அகற்றப்பட்டு விட்டதாம். குளத்தோடு கோபித்துக் கொண்டு ஒரு முன்கோபக்காரன் செய்த செயலுக்கும், மத்திய மாகாண சர்க்காரின் நடத்தைக்கும் ஒன்றும் வித்தியாசமில்லை என்று நாம் சொன்னால் அவர்கள் கேட்கவா போகிறார்கள்? சட்டசபையிலே 12 மனிதப் பிண்டங்கள்—எத்தனையோ லட்சம் பேருடைய பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டிருக்க, அவர்களையெல்லாம் வெறும் அறிவற்ற—இயக்கமற்ற மாமிசப் பிண்டங்களாகக் கருதி, அவர்கள் அறிந்த மொழிக்கு—மதிப்புக் கொடுக்கமாட்டோம், இந்தியோ மராத்தியோ கற்றுத்தானாகவேண்டும் என்று கட்டளை போடாமல் கட்டளையிடுகிற சர்க்காருக்கு நாம் கூறுவது ஏறவும் மாட்டாது—பொருத்தமுமில்லை, தேவையுமில்லை. ஆனால் இந்த மாதிரியான ஒரு சீர்திருத்தம் நம் நாட்டிலும் ஏற்பட்டு விடவேண்டும் என்கிற தோரணையில், நம் நாட்டுப் பார்ப்பனோத்தமர்களும், அவர்களைப் பின்பற்றி நம்மவர்கள் சிலரும் ஆசைப்படுகிறார்களே, அதைப் பார்க்கும் போதுதான் எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது. ஆனால் ஆத்திரப்பட்டு என்ன செய்வது? திராவிடத்தின் பிரதிநிதிகள் பார்ப்பனர்களும்—அவர்களைப் பின்பற்றியவர்களும்தான் என்று இருக்கும் வரை ஆத்திரத்தினால் ஆகக்கூடியதென்ன?

நம் கல்வி மந்திரி

என்பதாக, இப்போது நமக்கு காட்சிப் பொருளாக விளங்குபவர் தோழர் மாதவமேனர். இவர் ராஜதானிக் கல்லூரியில் சமஸ்கிருத மாணவர்கள் சங்கத்தில் பேசும் போது, சமஸ்கிருதம் தமிழ் நாட்டினரால் ஏகோபித்து வெறுக்கப்படுகிறது என்பதாகக் கூறி, இது தமிழர்களின் முட்டாள்தனம் என்று பட்டஞ்சூட்டி, எப்படியும் இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டியதே—அதாவது தமிழர்கள் எல்லோரும் சமஸ்கிருதத்தின் மேல் ஆசைப்படும்படி செய்து விடுவதே நம்முடைய கடமை என்பதாக, சமஸ்கிருத மாணவர்களை—மாணவிகளையும்சேர்த்துக்கொண்டு கூறியிருக்கிறார், கல்வி மந்திரியார் 790 மாணவர்கள் படிக்கும் ஒரு பள்ளிக்கூடத்துக்குப் போனதையும், அங்கு ஒரே ஒரு மாணவர் மட்டும்தான் சமஸ்கிருதம் படிப்பவர் என்பதாகக் கூறப்பட்டது என்பதையும், அந்த ஒரு மாணவரும் பார்ப்பன மாணவர் என்று சொல்லப்பட்டது என்பதையும் கூறிக் கண்ணீர்த்துளிகளைக் குடம் குடமாகக் கொட்டியிருக்கிறார்.

இந்தச் செய்தியைக் கேட்கும் ஒரு பொறுப்பான மந்திரியார் கண்ணீர்விடவேண்டியதும், கனல் கக்க வேண்டியதும் நியாயம்தான்! வரவேற்கவேண்டியதுதான்! ஒரே ஒரு மாணவன் சமஸ்கிருதம் படிப்பதற்காக—அதுவும் நாட்டு மக்கள் ஏகோபித்து வெறுக்கும் ஒரு மொழியைக் கற்றுக்கொள்கிறேன் என்று முன்வர—அந்த ஒரு மாணவனுக்காகப் பள்ளிக்கூடம் ஆசிரியரை ஏற்படுத்தி, சமஸ்கிருத வகுப்பை நடத்த அனுமதித்துக் கொண்டிருப்பதைக் கேட்டுக் கண்ணீர் விடவேண்டியதும், பொதுப்பணம் பலனில்லாத வகையில் செலவு செய்யப்படுவதைக் கண்டிக்கவேண்டியதும் நியாயம் தான்! ஆனால் அருமை அமைச்சரோ, அதற்காக—ஒரு குலத்துக்கொரு நீதி என்ற முறையில் நடத்தப்பட்டு வரும் அந்தப்பள்ளிக் கூடத்தின் அநீதியைக் கண்டு கலங்காமல், ஆகா! சமஸ்கிருதத்தின் அருமை, பெருமை யென்ன? அதை ஒரு மாணவன் மட்டும்தானா கற்பது? 790 மாணவர்களும் ஏன் அதைக் கற்கக்கூடாது என்று கேட்கிறார். மேலும், இந்தமாதிரியான தொண்டை நிறைவேற்ற வேண்டியதுதான் நம் முதற்கடமை என்பதாகக்கூறி, மாணவர்களையும்-மாணவிகளையும் துணைக்கு அழைக்கிறார்.

தோழர் மாதவ மேனர்

சமஸ்கிருத ஆதிக்கத்திற்குப்பலம் திரட்ட வேண்டியதையும்—சமஸ்கிருத மொழியை எல்லோரும் கற்றுக்கொள்ளவேண்டுமென வேண்டுகோள்விட வேண்டியதையும் தான்

கழகத் தோழர்களுக்கு!

—(•)—

(23—8—49 'விடுதலை' தலையங்கம்)

''திராவிடகழகமானது சமுதாயத் துறையில் ஒரு பெரிய மாறுதலை உண்டாக்குவதற்கு ஆக மக்கள் இடையில் பிரசாரம் செய்யும் ஒரு பிரசாரக் குழு ஸ்தாபனமே (இயக்கமே) தவிர இது ஒரு கட்சி அல்ல'' என்பதாக பெரியார் சேலம் மாநாட்டுக்குப் பிறகும், தெளிவாக திருச்சி மாநாட்டுக்குப் பின்னும் வலியுறுத்தி வந்திருப்பதுடன், இந்த 3, 4 ஆண்டுகளாக கழகப் பிரசாரத்துக்கு ஆக சொற்பொழிவாற்ற நேர்ந்த ஒவ்வொரு கூட்டங்களிலும், துவக்கத்திலேயே கழகக் கருத்தையும் அதாவது கழகக் கொள்கையையும் அதன் வேலைத் திட்டத்தையும் விளக்குவதன் மூலம் நாளது வரை இதை நன்றாய் வலியுறுத்தி வந்திருக்கிறார்.

அன்றியும் கழகப் பிரசாரகர்களும் அனேகமாக இந்தப்படியே கூறி பிரசாரம் செய்து வந்திருக்கிறார்கள்.

கழகத்தில் உள்ள தோழர்களில் சிலரான 'திராவிட கழகம் தேர்தலில் சம்பந்தப்பட்டு சட்டசபை முதலிய பதவிகளை கைப்பற்றி, அரசியல் காரியங்களில் பிரவேசித்து அரசியலைக் கைப்பற்றி அதிகாரத்தின் மூலம் சில காரியம் செய்யலாம்'' என்று கருதியவர்களையெல்லாம் பெரியார் கண்டித்து ''அப்படிப்பட்ட பேச்சுக்கள் மேடைகளில் பேசக்கூடாது'' என்று திட்டம் செய்து வந்திருப்பதோடு, அந்தமாதிரி ''ஆசை உள்ளவர்கள் திராவிட கழகத்தில் இருந்து விலகித் தங்கள் வசதிக்கு, வாய்ப்புக்கு ஏற்ப தனி ஏற்பாடு செய்து கொள்ளலாம்'' என்று திட்டமாகக் கூறி இருக்கிறார்.

இதன் பயனாய் சட்டசபை முதலிய தேர்தலுக்கு கட்சியைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கருதியவர்களும், சட்டசபை முதலியவைகளுக்கு நிற்கவேண்டும் என்ற கருத்துள்ளவர்களும் பலர் கண்ணியமாக கழகத்தில் இருந்து விலகிக்கொண்டு இருக்கிறார்கள்.

மற்றும் கழகத்தின் போரால் நின்றவர்களுக்கும், கழகத்தைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சித்தவர்களுக்கும், கழகம் எதிர்ப்பாய் இருந்ததோடு, எதிர்ப்பு வேலையும் செய்து வந்திருக்கிறது. இதை யாவரும் அறிவர்.

ஆகவே திராவிடக்கழகம் பிரசார ஸ்தாபனம்தான் என்பதை வாயால் சொல்லுவதல்லாமல், எழுத்தில் எழுதுவதல்லாமல், காரியத்தில் கண்டிப்பாய் இருந்து வந்திருக்கிறது. கழகம் இந்தப்படி பிரசார ஸ்தாபனமாய் இருந்து இந்த 4, 5 ஆண்டுகளாக பிரசாரம் செய்து வந்திருப்பதில், கழகபிரசாரத்தால் பலன் ஏதும் ஏற்பட்டு விடவில்லை என்று யாரும் சொல்லிவிட முடியாது. இந்த பத்து ஆண்டுகளில் காரியத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டு இருப்பதோடு எண்ணத்தில் பெரிய மாறுதல்களும் ஏற்பட்டு இருக்கின்றன.

இந்த மாறுதல்கள் நம்மிடம் அதிகாரம் இல்லாமலும், நாம்யாரும் சட்டசபையில் இல்லாமலும், நாம் பெருத்த ''சத்தியாக்கிரகம்'' செய்யாமலும், வேறு விதமான கலவரம் குழப்பம், பலாத்காரமான காரியங்களில் ஈடுபடாமலும் பிரச்சாரத்தின் மூலம் மக்களுக்குள் மனமாறுதலை உண்டாக்கி கருத்துக்களை வளர்த்து, நம் திட்டங்களுக்குத் தாராளமான பொதுஜன ஆதரவுபெற்று, சர்க்காரார் தாங்களாகவே சில காரியங்கள் செய்யவும், பார்ப்பனர்களும் தீவிரமாய் எதிர்ப்பதற்கில்லாமல் தாராளமாய் நடைபெற விடவுமான நிலை ஏற்பட்டு வந்திருக்கின்றது.

கோவில்களிலும் உணவு விடுதிகளிலும் ஜாதி உயர்வு என்பது நல்ல அளவுக்கு மறைந்து வருகிறது. பள்ளிகளிலும், ஆஸ்டல்களிலும், மாணவர்களிடையிலும், மாணவிகள் இடையிலும் பார்ப்பனர்கள் எவ்வித உரிமையும் கொண்டாடாமல் சர்வ சாதாரணமாக கலந்து உணவருந்துவது மாத்திரமல்லாமல், மற்றவர்களால் சமைக்கப்படவும், பரிமாறப்படவும் ஆன உணவை உட்கொள்ளுகிறார்கள்.

அதுபோலவே கோவில்களிலும் பார்ப்பனர் பூசை செய்கிறார், சமைக்கிறார் என்பதல்லாமல் மற்றபடி பிரவேச உரிமை தாராளமாகி வருகிறது. கோவில்களில் சமையல், பூஜை ஆகிய இருகாரியங்களும்கூட நமமவர்களால் அனுமதிக்கப்பட்டு வருகிறதே தவிர அவர்களுடைய எதிர்ப்பால் நடைபெறாமல் இல்லை.

சமுதாயத் துறையில் இந்தக் காரியங்கள்தான் தலையான பேதமாய் இருந்தவைகள் என்றால், இவை எதிர்ப்பையும் தடையையும் சமாளித்து முன்னேறி விட்டன என்றாலும் இவற்றுள் இனியும் பல செய்ய வேண்டியிருக்கிறது என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் அவைகளுக்குப் பிரசாரமே போதும் என்று கருதுகிறோம். அதற்காக சட்ட சபைக்கோ மந்திரிப் பதவிக்கோ போகவேண்டிய அவசியமில்லை என்பதே பெரியாரின் கருத்தாகும்.

மற்றும் அடுத்தாற்போல் வகுப்புவாரி பிரதிநிதித்துவ விஷயம். இதுவும் 20-ஆண்டுகளுக்கு முன்பதாகவே முன்னாள் அமைச்சர் அய்யா முத்தய்யா முதலியார் அவர்களால் ஏற்பாடு செய்து வெற்றி பெற்ற விகிதம் சற்றேறக்குறைய பார்ப்பனர்களாலேயே இன்று ஒப்புக்கொண்டு எதிர்க்க முடியாத தன்மைக்கு வந்துவிட்டதோடு, சிறிது பலன் உண்டாகும் அளவுக்கு இன்று காரியத்தில் நடக்கின்றது என்று சொல்லலாம்.

மந்திரிசபை, ஹைகோர்ட் மற்றும் நிர்வாக இலாக்கா முதலியவைகளில் 10 ஆண்டுக்குமுன் இருந்ததைவிட பெரியமாற்றம் ஏற்பட்டிருப்பதோடு, பார்ப்பனர்களே இதை உணர்ந்து பல வழிகளில் தங்களைச் சரிப்படுத்திக் கொள்ளுகிறார்கள். அதாவது அவர்கள் பெரிதும் வியாபாரத்திலும், தொழில் முறையிலும் பிரவேசித்துவிட்டதோடு, உத்தியோகத்துக்கு வெளிநாட்டை நம்பி அதில் நாட்டமாக இருக்கிறார்கள். இந்திய சர்க்கார் இலாக்காவையும் நம்பி அதைக் கைப்பற்றி இருக்கிறார்கள். இவற்றின் மூலம் அவர்கள் தங்கள் ஜாதி உயர்வை காப்பாற்றிக் கொள்ள முடியாது. என்றாலும் இதற்கும் வழி இருக்கின்றது.

இனி கல்வித் துறையில் பள்ளிகள், கல்லூரிகள், முதலியவைகளிலும் முன்போல் இல்லாமல் நம் மக்களுக்குச் சற்று அதிக இடம் கிடைத்து வருகிறது. இனி இரண்டாண்டில் இந்த விஷயமும் முடிவு பெறலாம்.

மேற்கண்ட நிலைகளைக் கவனித்

(தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க)

மறுக்கவில்லை—யாரும் மறுக்க முடியாது. ஆனால் தென்னாட்டின்—திராவிடத்தின் கல்வி மந்திரி என்கிற பட்டத்தில் இருந்துகொண்டு, சமஸ்கிருதத்தைப் பரப்புவேன், அதுதான் என் கடமை என்பதாகக் கூறுவாரேயானால் அது யாருடைய தப்பு? அதைக்கூட நான் அவருடைய தப்பு என்பதாகக் கூற விரும்பவில்லை. இப்பேர்ப்பட்ட ஒருவரை, இன்னும் கல்வி மந்திரியாக இருக்க இடங்கொடுத்துக் கொண்டிருக்கிற தமிழ்நாட்டின் தப்பு—கையாலாகாத்தனம் என்று கூறினால் அதிலென்ன தவறு?

குடி அரசு

27—8—49 சனிக்கிழமை.

மொழிவாரிப் பிரிவினை.

கன்னடமும், களிதெலுங்கும், கவின் மலையாளமும், துளுவும் உன்னுதரத்து உதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும், தமிழ்ப் பெண்ணே! நீ பாட்டியாகிவிடவில்லை. உலகில் உன்னைப் போன்ற மற்ற பெண்கள் எல்லாம் கூனிக்குறுகி சிலர் பாட்டியாகி—மலர்ச்சியின்றி—நடைப்பிணமாகி விட்டனர். சிலர் செத்த இடத்திலே புல்லும் முளைத்துவிட்டது. ஆனால் அன்றிருந்த நிலைக்கு (முற்றும்) அழிவின்றி நீயோ கன்னிப்பெண்ணாக விளங்குகிறாய். உன்னை வாயார மனமார வாழ்த்துகிறேன், போற்றுகிறேன். ஏன்? நான் வாழ, என் மொழியினர் வாழ என்றார் பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே, மனோன்மணியம் என்ற நாடகத்தை எழுதிய பேராசிரியர் சுந்தரம்பிள்ளை.

ஆசிரியர் சுந்தரம்பிள்ளை ஒரு சுயமரியாதைக்காரரோ, சுயமரியாதை இயக்கத்தின் ஒரு பிரிவான திராவிடக்கழகத்தை சேர்ந்தவரோ அல்ல. மாறாக, சுயமரியாதை இயக்கத்துக்கு நேர் விரோதமான சைவமதத்தில், பழுத்த ஒரு சைவப்பழமாக, பலஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்தவர். அவர் கூறுகிறார் கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் போன்ற பல மொழிகள் தமிழில் இருந்து பிறந்தன என்றும், அத்தனை மொழிகளும் வழங்குகிறபிரதேசத்துக்குப் பெயர் திராவிடம் என்றும்.

ஆனால் ஆசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள், தமிழிலிருந்து பல மொழிகள் உண்டாயினஎன்று சொல்வதினால், அதை ஒரு பெருமைக்குக் காரணமாகக் கொண்டாரே தவிர, ஒரு மொழியிலிருந்து அத்தனை மொழிகள் ஏன் உண்டாயின? உண்டாவதற்குக் காரணம் எது? என்கிற ஆராய்ச்சியை, அந்த 'பாட்டுமொழியில்' சொல்லவில்லை.

என்றாலும் தமிழில் இருந்து இந்த மொழிகள், பதின்மூன்றா, பதினான்கா என்று சந்தேகப்படக்கூடிய அளவுக்குப் பல மொழிகளாகப் பிரிந்த தென்னாட்டுச் சரித்திரத்தை—மொழிவரலாற்றை ஆராய்ந்த நேர்மையான ஒவ்வொரு ஆராய்ச்சிக்காரர்களும், வெளிநாட்டார்-நம் நாட்டார் என்கிற வேறுபாடில்லாமல், ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த ஆராய்ச்சிக் கூற்றுக்கள் மட்டுமேயல்லாமல், அநுபவத்திலிருந்து பார்த்தாலும்கூட, தமிழர், தெலுங்கர், கன்னடியர், மலையாளிகளைத் தனித்தனிக் கூட்டத்தவர்கள் என்றோ, என்றைக்கும் தனித்தனியாகவே வாழ்ந்தாக வேண்டும் என்கிற நிலையில் உள்ளவர்கள் என்றோ எவரும் அறுதியிட்டுக் கூறிவிட முடியாது என்பதை நாம் பல முறை விளக்கி வந்திருக்கிறோம்.

இந்த அடிப்படை உண்மைகள்தான், தமிழர்களையும், தெலுங்கர்களையும், கன்னடியர்களையும், மலையாளிகளையும் சேர்த்துத் திராவிடர்கள் என்பதாகவும், இவர்களின் மொழிகளுக்குத் திராவிட மொழிகள் என்பதாகவும், பல மொழிக்காரர்களாயிருந்தாலும் அனைவரும் ஒரே இனத்தவர்கள்தான் என்பதாகவும் நாம் கூறி—விளக்கி—பிரச்சாரம் செய்து வருவதற்குக் காரணமாகும். இந்த அடிப்படைக்காரணங்களை வைத்துக் கொண்டுதான் ஆந்திரர்கள் ஆதரித்தாலும் இல்லாவிட்டாலும், மலையாளிகள் மனமொப்பினாலும் இல்லாவிட்டாலும், கன்னடிகள் காது கொடுத்தாலும் இல்லாவிட்டாலும், தமிழர்கள் திராவிடர்கள் என்பதை எப்படி மறுக்க முடியும்? எப்படி மறந்துவிட முடியும்? என்று கேட்டுவந்திருக்கிறோம்.

இனவாரியாக நாட்டைப் பிரிக்க வேண்டும் என்கிற கிளர்ச்சி, என்றைக்கிருந்தாலும் ஒருநாள் வந்தே தீரும், அது எவ்வளவு நாள் கழிந்தாலும் வெற்றிபெற்றே தீரும் என்பதை அறிந்த இந்துஸ்தான் ஏகாதிபத்திய காங்கரஸ், மக்களின் உரிமை உணர்ச்சியானது பெருங்கொந்தளிப்புக்கு இடமாகி, ஏகாதிபத்தியச் சிதைவுக்குக் காரணமாகிவிடக் கூடாது என்கிற முன்னெச்சரிக்கையோடு வகுத்த ஒரு சிறு வாய்க்கால்தான் உரிமைக்கு வழியற்ற மொழிவாரிப் பிரிவினை!

இந்த உப்பு சப்பற்ற மொழிவாரிப் பிரிவினைக் கிளர்ச்சியானது, குறிப்பாக நம் தென்னாட்டில்—திராவிடத்தில் கேட்கும்போதெல்லாம், இன்றைய இந்துஸ்தான் ஏகாதிபத்தியத்தால், மொழிவாரியாகப் பிரிவினை செய்யப்பட்டு, ஏதோ ஒரு சில காலத்திற்காவது, ஆந்திராவும், மற்ற திராவிட மொழிகள் பேசப்படும் பிரதேசங்களும் தமிழ் நாட்டிலிருந்து கத்திரிக்கப்பட்டு விடும் என்பதை நாம் அறியாதவர்களல்ல. அப்படிக் கத்திரிக்கப்பட்டாலும் கொஞ்ச நாட்களுக்குப் பிறகு பலவித ஒற்றுமைகளும் அனுகூலங்களும் இருக்கிற காரணத்தால், மொழிப் பேரால் கத்திரிக்கப்பட்ட இந்தப் பிரதேசங்கள், இனப்பேரால் ஒன்றுபட்டே விடும் என்கிறதான உண்மையையும் நாமறிவோம். இதனால்தான் மொழிவாரிப் பிரிவினையை, ஒரு பிரிவினையாகக் கருதாமல்—மொழிவாரிப்பிரிவினைக் கிளர்ச்சியை ஒரு கிளர்ச்சியாக மதிக்கவில்லை.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலும் பார்ப்பனீயத்திற்குச் சாவுமணியடிக்கப்பட்டு வருகிறது, பார்ப்பனீயத்தின் கெடுபிடி ஒன்றும் தமிழ்நாட்டுத் திராவிடர்களிடம் பலிக்காது என்பதைக் கண்டு கொண்ட ஆந்திரப் பார்ப்பனர்களின் தந்திரமும், தனி மாகாணமாக ஆக்கினால் பதவிக்கான இடங்கள் பலவாக உண்டாக்கப்பட்டு, பதவிக்குத் தரித்திரம் என்பது இருக்காது என்று நம்புகிற படித்த தோழர்களின் பதவி ஆசையுமே தென்னாட்டில் ஆந்திராவைப் பொறுத்தவரையிலும் மொழிவாரிப் பிரிவினைக் கிளர்ச்சி வெகு பலமாக வளர்ச்சியடையக் காரணமாகும். இந்த மொழிவாரிப்

அறக்கட்டளை

பிரிவினை என்கிற பிரச்னையில், அதிலும் குறிப்பாக ஆந்திரத்தைத் திராவிடத்திலிருந்து பிரிப்பதில், வடநாட்டு ஏகாதிபத்தியத்துக்குப் பெருமகிழ்ச்சி. அது மாத்திரமல்ல, சுயமரியாதை உணர்ச்சி ஊட்டப்பட்டிருக்கும் தமிழ் நாட்டுத் திராவிடர்களோடு, ஆந்திரத் திராவிடத் தோழர்களை மோத வைத்து, ஒருவரை ஒருவர் பகைத்துக் கொண்டு வாழும் வரையிலும் தனக்குக் கொண்டாட்டந்தான் என்பது அதன் நினைப்பு.

இந்த நினைப்போடுதான், இந்துஸ்தான் முழுவதிலுமே மொழிவாரி பிரிவினை ஏற்பாட்டை புகுத்தவேண்டும் என்கிற காங்கரஸின் ஒரு திட்டத்தைக் கைவிட்டு விட்டு ஆந்திராவிலும், இன்னும் அந்த நிலைக்கு ஆளான வேறு இரண்டொரு பகுதிகளிலும் பிரிவினைக்குச் சம்மதம் என்பதாக ஏகாதிபத்தியத் தலைமைப்பீடம் அறிவித்திருக்கிறது.

மொழிவாரியாக ஏகாதிபத்தியத்தால் பிரிக்கப்படும் பிரிவினை, பிரிவை என்றைக்கும் கெட்டியாக வைத்திருக்கவும், தன்தயவை எதிர்பார்த்துத்தான் வாழ்ந்தாக வேண்டும் என்கிற நிலையைப் பெருக்கி வளர்க்கவும், அண்டையில் நெருங்கி வாழ்பவர்களுக்குள், ஒருவர் மீதொருவரை உசுப்பிவிட்டு இடையில் சிந்தப்படும் இரத்தத்தை உறிஞ்சுவதற்காகவும் பயன்படும்—பயன்பட வேண்டும் என்பதுதான்.

இந்த நோக்கங்களோடு ஏகாதிபத்தியத்தால் பிரித்து வைக்கப்படும் பிரிவினையைத்தான் நாம் வெறுக்கிறோமே தவிர—கேடு உண்டாகும் என்பதாக அஞ்சுகிறோமே தவிர, ஒவ்வொரு மொழிக்காரர்களும் தனித்தனி மாகாணமாக நின்று, (இப்போதைய சென்னை மாகாணத்தில் உள்ளவர்கள்) இன அடிப்படையில் ஒரு சமஷ்டியாக இணைந்து, வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து அறவே விலகி, பரிபூரண சுதந்தர வாழ்வு வாழ வேண்டும் என்கிற லட்சியத்தோடு, செய்யப்படுகிற மொழிவாரிப் பிரிவினையை நாம் வெறுக்கவில்லை. மாறாக அதுதான் நம் அரசியல் லட்சியம் என்பதாக விளக்கி வந்திருக்கிறோம்.

ஆந்திரத்திலுள்ள பார்ப்பனர்களும்—வடநாட்டு ஏகாதிபத்தியமும் செய்து கொண்டிருக்கும் ஒப்பந்தத்தால், எல்லாவற்றுக்கும் முதலில் ஆந்திரம் தனியாகப் பிரிக்கப்பட்டுவிடும் என்றாலும், ஆந்திரத் திராவிடர்கள், சென்னை நகருக்கு உரிமை கொண்டாடுகிறார்கள் அல்லது சென்னை நகரில் பங்கு கேட்கிறார்கள் என்கிற காரணத்தைச் சொல்லித், தமிழ்த் திராவிடர்களின் பல்லைப் பிடுங்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதைத்தான், ஆந்திரப் பிரிவினையைப் பற்றி ஏகாதிபத்தியம் நடந்து கொள்ளும் போக்கிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

அந்தப் பல்லைப் பிடுங்கும் சங்கதிதான், தமிழ்த் திராவிடர்களுக்கே உரிமையான சென்னையை, தனி மாகாணமாக ஆக்கிவிட வேண்டுமென்கிற பேச்சு.

ஆந்திரத் தோழர்களை நமக்குக் காரணமாகக் காட்டி, "அப்பத்தை நிறுத்துக் கொடுக்க வந்த குரங்கு" நியாயத்தையும் தோற்கடிக்கும் முறையில், சென்னை நகர், தமிழ் திராவிடனிடமிருந்து பறித்துக் கொள்ளப்படுவதை, எந்த ஒரு திராவிடனும் ஒப்புக்கொள்ளவே முடியாது.

இந்த மாதிரியான அடிப்படையில்தான், அன்றைய ஏகாபத்திய வெள்ளையர்கள் சமஸ்தானாதிபதிகளை அமைத்தார்கள். அதே முறையைத்தான் இன்றைய ஏகாதிபத்தியமும் வேறு பேரால் அமைக்க எத்தனிக்கிறது.

இப்போது தமிழ் திராவிடர்களின் கடமை என்ன? ஏன் தமிழ் நாட்டில் வாழும் ஒவ்வொருவருடைய கடமை என்ன?

எந்தக் காரணத்தாலும், சென்னை நகரைத் தமிழ் நாட்டிலிருந்து பிரிக்க முடியாது என்பதை, வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு வற்புறுத்தி எடுத்துக் காட்ட வேண்டியதுதான் இன்றையத் தமிழ் நாட்டார்களின் முதல் வேலை. முக்கியமாகச் சென்னைத் தமிழர்கள், இந்தக் காரியத்தில் உடனடியாக இறங்கவேண்டும் என்பது நம் விருப்பம்.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

தால் நம் பிரசாரம் பயனற்றுப் போய் விட்டதாகவோ, நாம் மந்திரிசபையிலும், சட்டசபையிலும் இல்லாததால் பெரிய நஷ்டம் ஏற்பட்டுவிட்டதாகவோ சொல்லிவிட முடியாது.

மந்திரிகளும், காங்கரஸ்காரர்களும் கூட பெரிதும் நம் பிரசாரக்காரர்களாக இருக்கிறார்கள் என்று கருதலாம். ஆனால் அவர்களுக்குள்ள சுயநலமும், அந்த ஸ்தானமும் நம்மைப்போல பேசமுடியவில்லையே தவிர, மற்றப்படி நமக்கு பெரிய எதிரிகள்போல் நடந்து கொள்ளும்—காட்டிக் கொள்ளும் தோழர்கள் பக்தவத்சலம், மாதவமேனன், காமராஜர் ஆகியவர்களது உள்ளம்கூட நமக்கு நன்றாய்த் தெரியும். அவர்கள் சுயமரியாதைக்காரர்களும் திராவிட கழகத்தாருமே யாவார்கள். தங்கள் நலனுக்குக் கேடு இல்லாமல் செய்யக் கூடியதை செய்கிறார்கள்; செய்ய நினைக்கிறார்கள்.

ஆனால் நம் வேலை, கழகவேலை, பிரசாரமேயாகும்! பிரசாரமேயாகும்!!

இப்படிப்பட்ட இந்த பிரசார வேலை நடப்பதில் எந்தக் காரணத்தாலாவது 10 நாள், ஒரு மாதம், அல்லது இரண்டு மாதம் ஏதாவது காரணத்தால் தவக்கப்பட்டுவிடுவதால் முழுகிப் போகும் காரியம் என்ன? என்று கேட்கிறோம்.

"பிரசாரம் இல்லாமல் பெருத்த கேடு" ஏற்பட்டுவிட்டதாக ஒப்பாரி இடும் தோழர்களையே கேட்கின்றோம்.

"கழக வேலை 2 மாதமாக ஸ்தம்பித்துப் போனதால்" ஏற்பட்ட நஷ்டமென்ன?

பிரசாரம் நின்றுவிட்டதாக குலம் கலமாக எழுதி "பீப்பா பீப்பாவாக கண்ணீர்" விட்டும், வீட்டில் "தலையில் கைவைத்துக் கொண்டு" "துக்கப் படும்" தோழர்களில் பெரும்பான்மையோரைக் கேட்கிறோம்; புள்ளி விவரத்தோடு சொல்லும்படி. அதுவும் பிரசாரம் 'ஸ்தம்பித்துப்போன' காலத்துக்கு முன், குறைந்தது ஒரு ஆறுமாத காலத்தில் எத்தனை பிரசாரம் செய்திருப்பார்கள்? எங்கு எங்கு சென்று இருப்பார்கள்? எது எது பற்றி பேசி இருப்பார்கள்? அப்படி பாடுபட்ட வேலைஸ்தம்பித்துப்போனதால் தாங்கள் செய்ய முடியாமல்போய்விட்டதே என்று பதறுவதற்குக் காரணமாக,

சொல்லட்டுமே, வெட்கப்படும், வேதனைப்படும், விலகி நிற்கும் தோழர்கள்! பார்க்கலாம். வெளி இடட்டுமே ஒரு லிஸ்ட்டு வெளியார் அறியும்படி என்று கேட்கிறோம்.

இதை ஏன் எழுதுகிறோம் என்றால், பொது மக்களுக்கு "யாரும் கழக வேலை செய்யக் கூடாது"!

''கழக சம்பந்தமான காரியம் எதிலும் கலந்து கொள்ளக் கூடாது'' பெரியார் தலைமை ஒழியும்வரை எவ்வித காரியத்திலும் ஈடுபடாமல் ஒதுங்கி இருக்க வேண்டும்'' அதில் ''இராஜினாமா'' இதில் 'விலகி இருக்கிறோம்' 'விலகி இருங்கள்' 'விலகி இருப்பவர்கள் தங்கள் பெயரைக் கொடுங்கள்' 'கண்ணீர் அம்பை எய்யுங்கள்' என்று 'அழுத கண்ணீரும்' 'சிந்திய மூக்குடனும்' 'ஆத்திரப்பட்டு மனம் பதறி' அறிக்கை விட்டு கழக மக்களில் சிலரின் முட்டாள்தனத்தையும், சிலரின் யோசனையற்ற தன்மையையும், சிலரின் பொறுப்பற்றதன்மையையும், சிலரின் பொறாமைக் குணத்தையும், சிலரின் அதிருப்தி, வஞ்சம், பழிவாங்கும் தன்மையையும் பயன்படுத்திக் கொண்டு ஒரு சிலர் செய்த சுயநல காரியத்தில் காரியம் சில நாளைக்கு 'ஸ்தம்பித்து'ப் போவதால் முழுகிப் போகும் காரியம் என்ன என்று மறுபடியும் கேட்கிறோம். காரணம் சொல்லுபவர்கள் தங்கள் உழைப்பையும் பங்கையும் தியாகத்தையும், பட்ட கஷ்டத்தையும், அனுபவித்த கஷ்டத்தையும் புள்ளி விவரத்தோடு சொல்லி அதன் கீழே சொல்ல வேண்டும் என்கிறோம்.

சீக்கிரத்தில் இந்த ''கேடான'' நிலைக்கு யார் பொறுப்பாளியென்பதை மக்கள் உணருவார்கள். அதற்காகவே இனியும் சிறிதுநாள் 'ஸ்தம்பித்து' இருக்கட்டும். ஒன்றும் முழுகிப் போகாது.

விலகி இருப்பவர்களுக்கு விசனம் ஏன்? ஒதுங்கி இருப்பவர்களுக்கு ஒப்பாரி ஏன? ராஜினாமா கொடுத்தவர்களுக்கு கவலை ஏன்?

பெரியார் 'ஒழிந்த' பிறகு அல்லது 'ஒழிக்கப்பட்ட' பிறகுதானே இவர்கள் கழகத்தைப் பற்றி கழக வேலையைப் பற்றி கவலைப்பட வேண்டியவர்களாவார்கள்?

அதுவரை, பெரியாரை ''ஒழிக்கும்' வேலையில் இவர்கள் ஈடுபட வேண்டியதுதான் கடமையும், நேர்மையும், அறிவுடைமையுமாகுமே தவிர, அதுவரை கழக வேலையை — திட்டத்தைப் பற்றி பேசுவது வீண் வேலைதானே. பெரியார்தாம் ''ஒழியப்போவதில்லை'' ''ஒழிக்கப்படும் வரை என் காரியத்தை, எனது பொறுப்பை நான் இதுவரை செய்துவந்ததுபோல் கிடைத்த வசதியைக் கொண்டு செய்யத்தான்போகிறேன்.'' என்று கூறியிருக்கிறார். அவருக்கு மற்றவர்களைவிட அதிகப் பொறுப்பு உண்டு; மற்றவர்களைவிட அவர் செய்த தொண்டுக்குப் புள்ளிவிபரம் கொடுக்க அவரால் முடியும். அந்தப் புள்ளிவிவரங்கள் அவர் ஒழியவேண்டும், அல்லது அவரை ஒழித்தாகவேண்டும், என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் வீரர்களுக்கும் தெரியும். அவர்களிடம் புள்ளிவிவரமும் உண்டு. அதை அவர்களில் சிலர் புள்ளிவிவரத்தோடு பிரசாரம் செய்து பலனடைந்திருக்கிறார்கள். ஆதலால் யாவருக்கும் தெரியலாம். அப்படிப்பட்டவருக்குக் கழகம் ''ஸ்தம்பிப்பதால்'' இல்லாத துக்கம் மற்றவர்களுக்கு எப்படி அதிகமாயிருக்கமுடியும்?

பொதுமக்கள் இதுசமயம்தான் தங்கள் சொந்தப்புத்தியைக் கொண்டு சிந்திக்கவேண்டும். பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்துபார்க்கவேண்டும்.

''பெரியார் திருமணம் செய்து கொண்டார். அதனால் கழகத் தோழர்கள் கழகத்தில் இருந்து விலகியிருக்கவேண்டும்' என்றால் சரி 'பலர்' விலகிவிட்டதே. விலகியவர்கள் இனி பெரியாருடன் கழகத்திலிருந்து கழகப்பணி ஆற்றவேண்டுமானால் பெரியார் ''மன்னிப்புக் கேட்டுக்கொண்டாலும்கூட'' போதாதே. திருமணத்தையும் ரத்துச் செய்துவிட வேண்டுமாமே.''

இந்தப்படியான நிபந்தனைக்கும், கழகக் கொள்கைக்கும், கழகத் திட்டத்துக்கும், கழக விதி முறைக்கும் என்ன சம்பந்தம்? என்பதாக விலகி நிற்கும் தோழர்கள் ''வேதனைப்பட்ட தோழர்கள், பெரியாரிடம் நம்பிக்கை இழந்துவிட்ட தோழர்கள்'' ஆகியவர்களில் ஒருவராவது சிந்தித்துப்பார்த்ததாகக் கூறமுடியுமா?

பெரியார் இன்று ''மன்னிப்புக் கேட்டு திருமண ரத்து செய்து'' கொள்ளுகிறார் என்றே வைத்துக் கொள்ளுவோம். நாளைக்கே இதே ''வேதனைப்பட்ட, வெட்கப்பட்ட'' தோழர்கள்,

''பெரியார் தாடி வைத்துக்கொண்டிருக்கிறார். இது வெகுநாளாகப் பெரியார் வைத்துக்கொண்டு இருந்தாலும் திருந்துவார் என்று நினைத்திருந்தோம். அவரிடத்திலிருந்த மரியாதைக்காகவும், என்னமோ கிழ வயதில் பாடுபடுகிறார் என்பதாலும் பொறுத்து இருந்தோம். இனிப் பொறுக்கமாட்டோம். வெளியில்தலைகாட்டமுடியவில்லை. மதத்தை வெறுக்கும் பெரியார் மத சின்னமான அதுவும் சாமிக்கு முடி கொடுப்பதான மூடநம்பிக்கை காரியமாகிய தாடி வைத்திருக்கிறார். ஆதலால் ''வேதனைப்படுகிறோம் — விரட்டப்படுகிறோம்— வெட்கப்படுகிறோம்'' நாம் விலகி இருக்கவேண்டும். அல்லது அவர் விலகவேண்டும். இல்லாவிட்டால் மன்னிப்புக்கேட்டாலும் போதாது. தாடியை எடுத்துவிடவேண்டும்.''

என்று ஆக்கினையிட்டு மக்களும் இதை ஏற்று ''பீப்பா பீப்பாவாகக் கண்ணீர் சிந்தி'' முன்னணிக்கு அனுப்பிவிட்டு விலகியிருந்தால் அப்போது 'கழகம் ஸ்தம்பித்துவிட்டால் என்னசெய்வது?

அதுவும் முடிந்தபிறகு ''பெரியார் பச்சைக்கல் மோதிரம் ஏன் போட்டிருக்கிறார்? மேடைகளில் கம்யூனிசம் பேசினவராயிற்றே. ''வெட்கப்படுகிறோம்—வேதனைப்படுகிறோம்— விரட்டப்படுகிறோம்......'' என்றால் அந்த ''ஸ்தாபன மக்களுக்கு'' எப்படிப்பரிகாரம் செய்வது? பொதுமக்கள் என்பதைக் களிமண்ணாகநினைத்துக் கொண்டு அதில் எந்தஜீவன் உருவமும் செய்ய ஆரம்பித்தால், பொதுமக்களும் சிலர் அதற்கு ஏற்ப ஆனால் லீடராலாகட்டும், ஜனநாயகத்துக்கு மதிப்புக் கொடுக்கும் தலைவரால்தானாகட்டும் என்ன காரியம்தான் செய்யமுடியும்? இந்தக்காரியங்களை ஜனநாயகம் என்று ஒருவன் எண்ணினால் அவன் நிலை, அவன் நடத்தும் காரியத்தின் நிலை, கழகத்தின் கதி என்னஆவது? என்று கேட்கிறோம்.

எந்த ஸ்தாபனத்திலாவது வேறு எங்காவது இப்படிப்பட்ட ஜனநாயகம் இருக்கிறதாக யாராவது காட்டமுடியுமா? இதுதான் தலைவருக்கு, லீடருக்கு பின்பற்றுபவர் காட்டும் மரியாதையா?

இப்படிப்பட்ட காரியத்தால் கழகப் பிரச்சாரம் ''ஸ்தம்பித்தால்'' அதற்குத் தலைவர் பொறுப்பாளியா, பின்பற்றுகிறவர்கள் பொறுப்பாளியா? 'ஜனநாயகம்' பொறுப்பாளியா என்பதைக் கழகத் தோழர்கள் சிந்திக்கவேண்டும். அவர்கள் சிந்திக்காவிட்டாலும் பொது மக்கள் சிந்திக்கவேண்டும்.

இதுவரை நாம் முன்பின் சந்தித்த அடையாளம் தெரிந்த சுமார் 400, 500 மக்களால், விலாசம்விவரம் பதவி நிலை; அந்தஸ்து ஆகியவைகளோடு பத்திரிகை காரியாலயத்துக்கும் பெரியாருக்கும் பெரியாரை ஆதரித்து, மன்னிப்புக்கேட்டு, பல இரகசியங்கள், தவறுகள், எதிர்ப்பாளர்கள் செய்த நேர்மையற்ற காரியங்கள் ஆகியவைகளைக் காட்டி எழுதப்பட்ட கடிதங்கள் அதுவும் 2 பக்கம் 4 பக்கம்முதல் 41 பக்கம் 56 பக்கம் என்று காணும்படியாக வந்துஇருக்கின்றன. இனியும் தினம் 20, 30 வருகின்றன. இவைகளில் இதுவரை சுமார் 30 40 கடிதங்கள்கூடப் பிரசுரிக்கப்படவில்லை. பிரசுரிப்பதையும் அதிருப்தியோடு செய்யவேண்டியிருக்கிறது. இப்படி எழுதுவது மக்களுக்கு ஒரு நாகரீகமாக ஆகிவிட்டதுபோலும். ஆதலால் அவைகளைப் பிரசுரிக்கமுடியவில்லை என்பதோடு பத்திரிகையின் இடம் பயனற்றதாகும்என்றுகருதியிருக்கிறோம்.

பகுத்தறிவும் கடவுள் வாக்கும்!

வினா:- மதம் என்றால் என்ன?

விடை:- உண்மையில் நம்பிக்கை.

வினா:- உண்மை என்றால் என்ன?

விடை:- ஏதேனும் ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப்பற்றி பரிபூரண ஞானமே உண்மை.

வினா:- உண்மையில் நம்பிக்கை என்றால் என்ன?

விடை:- அப்பேர்ப்பட்ட பூரண ஞானம் வாழ்க்கையின் உயரிய லட்சியத்தைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமானது என்ற நம்பிக்கையே உண்மையில் நம்பிக்கை எனப்படும்.

வினா:- உண்மையில் உள்ள நம்பிக்கையை எப்படி நிரூபித்துக் காட்டுவது?

விடை:- தன் உயர்வான—தெளிந்த-அறிவுக்குப் பொருத்தமாக நடப்பதினால் நிரூபித்துக் காட்டலாம்.

வினா:- உண்மை அல்லது பரிபூரண ஞானத்தை எப்படி அடைவது?

விடை:—அனுபவத்தினாலும் பயிற்சியினாலும் அடையலாம்.

வினா:- வேறு வழியில்லையா?

விடை:- இல்லை.

வினா:- மதத்தைப் பற்றி நீ கூறிய வியாக்கியானம் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட வியாக்கியானம்தானா?

விடை:- தெய்வ நம்பிக்கையும் தெய்வ அருளைப் பெற்ற மதாசிரியர்கள் வகுத்த விதிகளில் நம்பிக்கையுமே பொதுவாக மதம் என மதிக்கப்படுகிறது.

வினா:- தெய்வீகம் என்றால் என்ன?

விடை:- தெளிவாய் அறியப்பட்ட இயற்கை விதிகளுக்குப் புறம்பானவைகளெல்லாம் தெய்வீகமானவைகளே.

வினா:- அத்தகைய விஷயங்களில் நாம் கைக்கொள்ள வேண்டிய நிலை என்ன?

விடை:- அவைகளை நாம் எதிர்க்கக் கூடாது. அவைகளைப் பற்றித் தாராளமாக விவாதிக்க இடம் கொடுக்க வேண்டும்.

வினா:- இதர வழிகளில் அறிந்து கொள்ள முடியாத பல விஷயங்களை, கடவுள் வாக்கான வேதங்கள் நமக்கு விளக்கிக் கூறவில்லையா?

விடை:- எத்தனையோ வேதங்கள் இருக்கின்றன. எனவே எந்த வேதம் உண்மையான கடவுள் வாக்கு என்பதை நாம் முதலில் நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும்.

வினா:- வேதங்களில் சிலவற்றைக் கூறுக.

விடை:- ஜொராஸ்டிரிய வேதம், பிராம்மண வேதம், பௌத்த வேதம், யூத வேதம், கிறிஸ்துவ வேதம், முகமதிய வேதம், மார்மன் வேதம்.

வினா:- இந்த வேதங்கள் எல்லாம் தெய்வ வாக்கென உரிமை பாராட்டுகின்றனவா?

விடை:- ஆம்.

வினா:- அந்த வேதங்கள் பரஸ்பரம் ஒன்றையொன்று அங்கீகரிக்கின்றனவா?

விடை:- இல்லை. மாறாக ஒவ்வொன்றும் மற்றவை பொய் யென்று கண்டிக்கின்றன.

வினா:- அதை விளக்குக.

விடை:- "எனக்கு நிகராக உலகத்திலோ, சுவர்க்கத்திலோ யாருமில்லை. நானே பூரண ஞானம் பெற்ற புத்தன்" என்று புத்தர் கூறியிருக்கிறாராம்.

வினா:- வேறொரு உதாரணம் கூறுக.

விடை:- "நானே உண்மையான வழிகாட்டி; எனக்கு முன் வந்தவர்கள் எல்லாம் பொய்யர்கள், திருடர்கள், என்னையன்றி வேறு ஒருவருக்கும் என் பிதாவை அறிய முடியாது" என்று இயேசு கூறியிருக்கிறாராம்.

வினா:- இதைவிட முக்கியமாக மதிக்கக்கூடிய ருசு வேறு ஏதாவது உண்டா?

விடை:- ஒவ்வொரு மதஸ்தரும் பிற மதஸ்தரை தம் மதத்துக்கு இழுக்க முயல்கிறார்கள்.

வினா:- மதமாற்றம் என்றால் என்ன?

விடை:- நாம் நம்புவதுபோல பிறரும் நம்பும்படி செய்வதே மதமாற்றம்.

வினா:- அதன் நோக்கம் என்ன?

விடை:- நோக்கம் பலவாக இருக்கலாம். எனினும் அவற்றுள் முக்கியமானது நம்மைப்போல் மற்றவர்கள் நம்பாவிட்டால் நரக தண்டனை பெறுவார்கள் என்பதே.

வினா:- மேலே கூறப்பட்ட வேதங்களில் எது உண்மையானது?

விடை:- ஒன்றாவது முழுதும் மெய்யானதோ பொய்யானதோ அல்ல.

வினா:- அவற்றுள் எது பொய், எது மெய் என்று எவ்வாறு அறிவது?

விடை:- பகுத்தறிவினால் அறிந்து கொள்ளலாம்.

வினா:- அப்படியானால் வேதங்களைவிடப் பகுத்தறிவு மேலானது என்று ஏற்படாதா?

விடை:- ஆம். ஏற்படத்தான் செய்யும்.

வினா:- அவ்வளவு உயர்வான பகுத்தறிவு நம்மிடம் இருக்கையில் மேலும் நமக்கு மதங்களும், வேதங்களும் வேண்டுமா?

விடை:- நமக்கு வேண்டாம்.

எழுதினவர்கள் மன்னிக்கவேண்டும்.

நிற்க, தோழர்களே! பெரியார்உள்ள வரை கழக காரியம் கடுகளவும் ஸ்தம்பித்துவிடாது; குறைந்தும்விடாது; எதும் கெட்டும்விடாது. முன்னிலும் அதிக வேகமாக மக்கள் இடையில் கழகம் நம்பிக்கையும் நாணயமும் நேர்மையும் உண்டாகும்படியும், பரிசுத்தத் தன்மையோடும் நடைபெறும். உங்களுக்குச் சந்தேகம் வேண்டாம், வேண்டவே வேண்டாம்.

கழக மக்களில் விலகினவர்கள்—இருப்பவர்கள், தலைவரிடம் நம்பிக்கையுள்ளவர்கள்—நம்பிக்கை இல்லாதவர்கள், விதி முறை ஒழுக்குமுறைக்குக் கட்டுப்பட்டவர்கள்—கட்டுப்படாதவர்கள் என்பதான இந்த விபரங்கள் தெரிந்தபிறகுதான் கழக காரியம் பெரிதும் துவக்கப்படவேண்டி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பகுத்தறிவுக்குப் பொருத்தமான வேதங்களைத்தான் ஒப்புக் கொள்ள முடியும்.

வினா:- ஒரு புத்தகத்தில் கடவுள் வார்த்தை அடங்கியிருப்பதாக நீ நம்பினால், அது பகுத்தறிவுக்குப் பொருத்தமாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் நீ அதைப் பூரணமாக நம்ப வேண்டியதுதானே?

விடை:- நம்பத் தேவை இல்லை.

வினா:- அது எப்படி?

விடை:- நான் குருட்டுத்தனமாக நம்பினால் அந்த நம்பிக்கைக்கு மதிப்பேயில்லை. கட்டாயத்தின் பேரில் நம்பினால் அது மனப்பூர்வமான நம்பிக்கையுமல்ல. பகுத்தறிவால் நான்டப்பட்டு நான் நம்பினால் என் நம்பிக்கைக்குப் பாத்திரமானது என் பகுத்தறிவேயன்றி வேதமல்ல.

வினா:- இதற்கு ஒரு உதாரணம் கூறுக.

விடை:- பூமி பரப்பானது என்று எந்த வேதம் கூறினாலும் நாம் நம்பமாட்டோம். ஏனெனில் நமது அனுபவத்திலும் ஆராய்ச்சியிலும் பூமி பரப்பாக இருக்கவில்லை.

வினா:- பகுத்தறிவுப்படி தப்பானதையும் நம்ப வேண்டுமென்று வேதம் கட்டளையிட்டால் நீ கடவுள் வாக்கான வேதத்துக்குக் கீழ்படிவாயா? பகுத்தறிவுக்குக் கீழ்படிவாயா?

விடை:- பகுத்தறிவுக் கொத்தபடி நான் நடந்து கொள்ளாவிட்டால் நான் ஒழுக்கமுடையவன் ஆகமாட்டேன்.

வினா:- பகுத்தறிவு பொய் என்று கூறுவதை மெய் என்று நம்புவது சாத்தியமில்லையா?

விடை:- சாத்தியமே அல்ல. பகுத்தறிவே மேலான ஆதாரம்; அதிகாரி. மெய்யானதை மெய்யென்று நம்பும்படி பகுத்தறிவைக் கட்டாயப்படுத்த யாருக்குமே அதிகாரமில்லை.

வினா:- பகுத்தறிவுக்கு முரணான விஷயங்களை எந்த வேதமாவது போதனை செய்கிறதா?

விடை:- ஆம். எல்லா வேதங்களும் போதனை செய்கின்றன.

வினா:- உதாரணம் கூறுக.

விடை:- படைப்புக் கதை.

வினா:- வேறொரு உதாரணம்.

விடை:- பிரளயக் கதை.

வினா:- மேலும் ஒரு உதாரணம்.

விடை:- மனிதன் சபிக்கப்பட்டு பாபியான கதை.

வினா:- அவைகளைப்பற்றித் தற்காலத்திய அபிப்பிராயம் என்ன?

விடை:- வேதங்கள் கூறுகிறபடி மனிதன் சாபத்துக்கு உள்ளாகவில்லை; பிரளயம் உண்டாகவில்லை; கடவுள் பிரபஞ்சத்தைப் படைக்கவில்லை என இப்பொழுது நமக்கு நிச்சயமாகத் தெரிகிறது.

வினா:- வேதங்களில் உள்ள வேறு தப்புகள் எவை?

விடை:- சரித்திரப்படியும், விஞ்ஞான சாஸ்திரப்படியும் தப்பான பல விஷயங்கள் வேதங்களில் அடங்கியிருக்கின்றன. வேதங்களில் கூறப்பட்டவைகள் எல்லாம் பரஸ்பரம் முரணாக இருக்கின்றன, பாபகரமான பல விஷயங்களையும் வேதங்கள் போதனை செய்கின்றன.

வினா:- வேதங்களில் காணப்படும் இத்தகைய தப்புகளுக்குக் காரணம் என்ன?

விடை:- மனிதன் தப்புச் செய்யக்கூடியவன் தானே!

வினா:- அப்படியானால் வேதங்கள் எல்லாம் மனிதன் வகுத்தது தானா?

விடை:- வேதங்கள் மக்களின் அறிவும், அறியாமையும், நற்குணமும், துர்க்குணங்களும் அடங்கிய ஒரு நூலேயன்றி வேறல்ல.

வினா:- அப்படியானால் நாம் செய்ய வேண்டியது என்ன?

விடை:- நம்மிடமுள்ள ஒளி, வழி காட்டுகிறபடி நடக்க வேண்டும்.

வினா:- அது என்ன ஒளி?

விடை:- அதுதான் பகுத்தறிவு.

வினா:- பகுத்தறிவு நம்மை தப்பு வழியில் செலுத்தாதா?

விடை:- ஆம். செலுத்தக்கூடும்.

வினா:- அப்படியானால் அதை ஏன் நாம் பின்பற்ற வேண்டும்?

விடை:- ஏனெனில் அதைவிடச் சிறந்த வழிகாட்டி நமக்கு வேறில்லை.

(தொடரும்)

எச்சரிக்கையாயிருக்கணும்!

(சில்லரை கிடைப்பதில்லையே எ. மெ)

1. எச்சரிக்கையாயிருக்கணும் தோழர்களே
எச்சரிக்கையாயிருக்கணும்—இச்சமயம்
நய்கட்டுப்பாட்டையே நினைக்கணும். (எச்

2. கண்டகண்டபடி வெறும் வதந்தியைப் பரப்புறார்
கண்ணியவான்கள்போல் நீலிக்கண்ணீர் வடிக்குறார்
காரணமில்லாத வெத்துவேட்டைக் கிளப்புறார்
கட்டுப்பாடுஎன்னும் நம்ம கோட்டையைக் கலைக்குறார் (எச்

2. அதிகார வர்க்கத்தின் அடக்குமுறை ஓர்புறம்
ஆரிய வீரியன்கள் சீறுது ஓர்புறம்
எதிர்க்கட்சிக்காரர்களின் தொல்லை நமக்கோர்புறம்
சந்தர்ப்பவாதிகளின் தந்திரத்தில் சிக்காமலே (எச்

4. பச்சைப் பச்சை பொய்பரப்பும் பார்ப்பனரின் ஏடுகள்
பரபரப்பை உண்டுபண்ணும் நம்மவரின் ஏடுகள்
கயிர்திரித்து கதைகள்கட்டும் கண்ணியமற்ற ஏடுகள்
கார்டூன்போட்டுக் காசுபறிக்கும் காங்கரஸ் திராவிடர் ஏடுகள் (எச்

5. இயக்க முறையை இரும்புக் கோட்டையாயமைக்கணும்
கோணல்புத்திக்காரர்களை நம் கோட்டையை விட்டகற்றணும்
பெரியாரின் தலைமையின்கீழ் பின்தொடர்ந்து செல்லணும்-நம்
லட்சியத்தையேயடைய போர்முரசு கொட்டணும் (எச்

சேலம் மா. சிற்பி.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

"ஆயிரம்—ஆயிரம் மேடைகளிலே, திருமண வீடுகளிலே, இடி முழக்கம் செய்தோமே!, "இரு மனமும்—ஒரு மனப்பட்டதே திருமணம்" என்று, "மனம் ஒத்த வாழ்வே—நல்வாழ்வு" என்று மாணிடப் பிண்டங்கள் சூழ்ந்த இடத்திலே அறிவுத் தீயை மூட்டினோமே? இன்று பிதற்றுகின்றீர்கள், ஏமாற்றுகின்றீர்கள்! வசை மொழிகளை வாரி! வாரி! வீசுகின்றீர்கள்! நாம் கூறினோமா? "இரு வயதும் ஒரு வயதாகியதே" திருமணமென்று, இரு வயதும் சமமுடையதே திருமணமென்று? திருமணம் செய்யவேண்டியதின் நோக்கம் யாது? நோக்கத்தின் விளைவு யாது? என்பதனைச் சிந்திக்க வேண்டாமா? திருமணம் செய்வதாயிருந்தால் முதற்கண் கவனிக்க வேண்டியவை யாவை? வயதையா? அல்லது திருமணத் தம்பதிகளின் மன ஒற்றுமையையா? வயதைப் பார்த்துத் திருமணம் செய்வதா? அல்லது திருமணம் செய்யப்போகும் தம்பதிகளின் விருப்பத்தைப் பார்த்தா? அவர்களின் மனநிலை, நடத்தை, குணம், இவைகளைப் பார்த்தா? முன்னது வயதை அடிப்படையாகக் கொண்டது, பின்னது குணத்தை அடிப்படையாகக் கொண்டது.

பின் கூறுகிறார்கள் 72-க்கும் 31-க்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டிப் பொருந்தாமணம் என்று? பொருந்தாமணம் என்பது யாது? எப்படிப்பட்டது? பொருந்திய மணம் என்பது யாது? எப்படிப் பட்டது? என்று கேட்டால் மூரணாக 72-31 என்கிறார்கள். ஏன்? இருவர்களின் எடை! உயரம்! பருமன் இவைகளைக் காட்டி, இதோ பார் வேறுபாடுகளை என்றால் ஆச்சரியப்படமாட்டோம்? என்ன நியாயம்?

கழகம் கூறியது, கூறிவந்தது, என்ன? கழகத்திட்டத்தின் நோக்கம் என்ன? திருமண விளைவால் சமுதாயம் அடைந்த நிலை என்ன? இன்றும்—அன்றும் சமுதாயத்திலே நடந்த திருமணம் எத்தன்மையது? அதனால் ஏற்படும் நன்மை தீமை என்ன? இன்றும்-அன்றும் சமுதாயத்திலே நல்ல முறையிலே, சிந்தனையோடு, அறிவோடு, திருமணம் நடந்திருந்தால், அல்லது நடந்திருக்குமேயானால் நாம் திட்டம் தீட்டியிருப்போமா? திருமணத்தைப் பற்றிப் பேச வேண்டிய நிலை ஏற்பட்டிருக்குமா? ஆம்! ஏற்பட்டுத்தான் இருக்காது? இன்று ஏற்பட்டுளதே, ஏன்? எதனால் என்பதைச் சிந்திக்க வேண்டும்?

நாம் உணர்ந்தோம்! அறிந்தோம்! திருமணத்தால் ஏற்படும் இன்னல்களை. எனவே இன்னலைப்போக்கி, இன்பம் மலரத் திட்டம் தீட்டினோம்! எனவே வாழ்க்கையைச் சுட்டெரிக்கும் அடாத திருமணம் கூடாது, இருவரின் நோக்கத்தின் படியே, சம்மதத்தின் படியே, விருப்பப்படியே திருமணம் செய்யவேண்டும் என்று கூறிவந்தோம். இதில் என்ன தவறு? பெரியார் மோசம் செய்து விட்டாராம்? கழகக் கொள்கைக்கு மாறாகத் திருமணம் செய்து விட்டாராம்? கூறுகிறார்கள் இந்த யோக்கியர்கள்! பெரியாரும்—மணியம்மையும் மனம் ஒத்துத்தானே திருமணம் செய்து கொண்டார்கள்? அதுவும் பதிவுமணம். பெரியாரை—மணியம்மை திருமணம் செய்து கொள்ள மறுத்தாரா? அல்லது மணியம்மை—பெரியாரை மணம் செய்து கொள்ளமாட்டேன் எனக் கூறினாரா? பின் ஏன் கூறுகின்றீர்கள்? "பெரியார் பொருந்தா மணம்" செய்துகொண்டார் என்று? இதிலேதான் எதிர்ப்பாளர்களின் சூழ்ச்சி அடங்கியுள்ளது? காலப்போக்கிலே, நாட்டிலே நடமாடும்!

அன்றும்! இன்றும்! சமுதாயத்திலே நடந்தவை, நடப்பவை யாவை? பெண்களை, இளம்பெண்களை, மணப்பக்குவம் அடையாத பெண்களை, வயதுவந்தவர்களுக்கோ, வயது உடையோர்கள்என்று கருதுபவர்களுக்கோ, பெண்ணின் சம்மதமோ, விருப்பமோ, அல்லது ஆணின் சம்மதமோ, விருப்பமோ இல்லாமல் செய்துகொடுக்கக் கூடாது என்று சொல்லிவந்தோம்! மக்கள் மறுத்தனர்! மங்கையர்கள் மனம் நொந்தனர்! பிடிவாதமாக இருவருக்கும் "திருமணம்" என்று சொல்லி ஏற்பாடு செய்தனர்! இதைத்தானே நாம் வேண்டாமென்றோம்!

இற்றைக்குப் பெரியார் திருமணம் அப்படிப்பட்டதல்லவே. இருவரும் சம்மதப்பட்டே பதிவு மணம் செய்து கொண்டார்கள்! எப்படிப் பொருந்தா மணம்ஆகும்? பெரியாரின் சம்மதமோ அல்லது மணியம்மையின் சம்மதமோ இல்லாமல் செய்திருந்தால் அல்லவோ பொருந்தா மணம். அதை விடுத்து 71-க்கும் 31-க்கும் வேறுபாடு என்கிறீர்களே, ஏற்றுக்கொள்வார்களா? சிந்தியுங்கள்.

கேள்வி நல்ல கேள்வி, ஆனால் கேட்கப்படவேண்டிய இடம்தான் வேறு! அடே! அப்பா! விவாக ரத்துச் செய்யவேண்டுமாம். அட! அசடுகளே! விவாக ரத்துச் செய்ய வேண்டியதின் நோக்கம் யாது? எப்பொழுது? ஏன்? எதற்காக?

பெரியாரும் — மணியம்மையும் நல்ல நிலைமையோடு வாழமுடியாவிட்டால்; ஒருவரோடு ஒருவர் மனம் ஒத்து வாழாவிட்டால், அதிலும் இருவரின் நோக்கத்தின் படி, அவர்கள் விருப்பப்பட்டால், இருவரும் "விவாகரத்து" செய்து கொள்ளலாம். அப்படியில்லையே, மனம் ஒத்துச் செய்த திருமணத்தை "ரத்து"ச் செய்துவிடு என்றால் நேர்மையாகுமா? அறிவுடையோர்கள், பொறுப்புள்ளோர்கள் சொல்லலாமா? இச்செயலைக் கண்டு உண்மையாகவே வெட்கப்படுகிறேன்?

கல்லூரி அம்மையார் தீட்டுகிறார்? கற்ற கல்வியைக் காற்றிலே விட்டு விட்டு, அறிவற்று, சிந்தனையற்று, ஆத்திரப்பட்டு, கோபக் கனல்வீச, அதே நேரத்தில் அகம்பாவம் தாண்டவமாட "ரோமாபுரிராணி" யென்று. யார்? யாரைக் கூறுகிறார்கள்? திருமதி மணியம்மையை—பகுத்தறிவுப்பணிபுரியும் மணியம்மையைத்தான் கல்லூரிப் பெண், தோழியர் உருக்குமணி கூறுகிறார் வெட்கப்படாமல்,கூசாமல் "ரோமாபுரி ராணி" என. ஏம்மா! "ரோமாபுரி ராணிகளின்" லீலைகள் என்ன? அவர்களின் அந்தரங்க வாழ்க்கை வரலாறு என்ன? நிலையென்ன? நினைப்பு என்ன? நடத்தை என்ன? குணம் என்ன?

அம்மையே! அலங்காரிகளையும், ஆடை பூட்டிகளையும், ஆள் மயக்கிகளையும், நூற்றுக்கணக்கான காதலர்களின் கனி மொழியைப் பருகிப் பருகி, சொக்கி வாழும் சொகுசுக்காரிகளின் அந்தரங்க அற்புதத்தையும் எடுத்துக்

காட்டி, இதோ! திராவிடத்திலே "ரோமாபுரி ராணிகள்" என மணியம்மையைக் காட்டுகிறாயே? ரோமாபுரி ராணிக்கும்—மணியம்மைக்கும் ஒற்றுமை உண்டா? ஆம்! எனில் இன்று "உலகில் உள்ள பெண்கள் அனைவரும் அக்கூட்டத்தைச் சார்ந்தவர்கள் தானே" நும் கூற்றுப்படி! மனம் ஒத்து வாழ்வு நடாத்தும், "மணியம்மை ரோமாபுரி ராணியாம்" கல்லூரி அம்மையின் கூற்று! நல்ல முறையிலே எழுது! ஏற்ற முறையிலே திட்டு! உண்மை முறையிலே ஊரார்களுக்கு உபதேசம் செய்! இது அம்மையாருக்கு மட்டும் அல்ல, அம்மையார் போன்ற நிலையும்-நினைப்பும் உடையோர்களுக்கு! இனி எழுத்தளவிலும், பேச்சளவிலும் உள்ளவர்களை நாடு நம்பாது. மக்கள் நம்பமாட்டார்கள்!

வேஷம் போடுவோர்களையும், பாசாங்கு செய்வோர்களையும், வெளிப் பகட்டுக்காரர்களையும் மக்கள் நம்பமாட்டார்கள்!

ஏ! அறிவு கெட்ட நாடே! பெரியார் செய்த திருமணம் பொருந்தா மணமா? உண்மையைச் சொல்! அட! துரோக நாடே! சிந்தனை செய்!

"நாத்தீகன்"

—o—

(2ம் பக்கத் தொடர்ச்சி)

என்கும் அம்பாளின் கண்கூடக் கருங்கல்லாய்த்தான் இருக்கவேண்டும். மறந்துவிட்டேன். கருங்கல்தானே!

மானத்தை மறைக்க முழத்துணியின்றி மல்லாந்துகிடக்கும், அந்த மாதை எல்லோரும் வாயில் வந்தபடியெல்லாம் வைதுகொண்டே சென்றார்கள். ஆனால், அவன் கோவில் உள்ளேபோய் படுக்கவேண்டுமென்று எனக்கு ஆசையாய் இருந்தது. ஏனென்றால், அந்த முப்பத்துமூன்று கோடி மூலவிக்ரகங்களுக்கும் மூன்று மூன்று கஜத்துணி கட்டியிருப்பதையும், அந்த நிர்வாணப் பெண்ணையும் ஏககாலத்தில் பார்ப்பார்களல்லவா? ஒருவேளை உள்ளே போய்ப் படுத்தால், கோவிலிலுள்ள மற்ற கருங்கல் நிர்வாணச் சிலைகளுடன் இதையும் சேர்த்து 'கலை' என்று பூஜித்துத் தொட்டுப்பார்க்க ஆரம்பித்துவிடுவார்களோ என்று பயந்தும் விட்டேன்.

மணி அடித்தது. பிரசாதம் வாங்கி விட்டுக் கோவிலை வலமாக வந்து வெளியே சென்றனர். ஆனால் அந்த அங்கஹீனர்களுக்கும், அனாதைகளுக்குள் ஒருகவளம் பிச்சைச்சோறுகூட ஒரு ஓட்டைக் காலணாக்கூடக் கிடைக்கவில்லை.

இந்தக் கொடுமைகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருப்பதாகச் சொல்லும் அந்த ஜகத்ரட்சகனும் (நடராஜன்) ஜகத்ரட்சகியும் (சிவகாமி அம்பாள்) ராட்சதனும், ராட்சசியுமாகத்தான் இருப்பார்களோ?

என்று பலவாறு சிந்தித்து ரத்தக் கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கும்போது வேகு வேகென்று என் நண்பர் சிவானந்தம் வந்து கொண்டிருந்தார்.

அருகில் வந்தவுடன் ஒருவித வெறி பிடித்தவர்போல், "வாருங்கள் மிஸ்டர் ஜேக்கப், இனி இங்கு ஒரு நிமிடம் கூட இருக்கக்கூடாது" என்று சொல்லி என் கையைப்பிடித்து பலவந்தமாக இழுத்துச் சென்றார்.

அவர் முகத்தில் இருள் படர்ந்திருந்தது. ஏதோ பெரிய திருட்டைச் செய்தவர்போல் காணப்பட்டார். மடிப்புக்கலையாத அவர் சட்டைகூட்டத்திற்குள் கசங்கி, துவண்டு, சுரிப்புச் சுரிப்பாக இருந்தது. அதுபோல் அவர்முகமும் துவண்டு, கசங்கி கண்ணும் கலங்கி இருந்தது.

"எங்கே போகவேண்டும்?" என்றேன்.

"திருவண்ணாமலை சர்வகலாசாலைக்குப் போனால்தான் மனநிம்மதி கிடைக்கும்; விஷயத்தையும் விபரமாகச் சொல்லலாம்" என்றார்.

"அங்கே யார் இருக்கிறார்கள்?" என்றேன்.

"என் நண்பர் பகுத்தன் இருக்கிறார்; உங்களைப்பற்றியும் கூற இருக்கிறேன். பார்க்கவேண்டுமென்று ஆசைப்பட்டார். அறிமுகம் செய்து வைக்கிறேன். வாருங்கள் சீக்கிரம் போவோம்" என்றார்.

போகும்போதே "என்ன விஷயம் சொல்லுங்களேன்" என்றேன்.

"நண்பரே. நான் பெரிய பாவம் செய்துவிட்டேன். இதுவரை செய்திராத—இனி என்றும் செய்யப்போகாத—செய்யமுடியாத அவ்வளவு பெரிய பாவத்தை நடராஜமூர்த்தி கோவிலுக்குள்ளேயே செய்து விட்டேனே!..." என்று சொல்லிப் பெருமூச்சுவிட்டு சிறு கண்ணீர்த்துளிகளை எனக்குத் தெரியாமல் சிந்தினார்.

"அன்பரே, இந்த பரந்த உலகில் பாவம் என்று ஒன்றும் கிடையாது. பாவத்திற்காகப்பயப்படவும் வேண்டாம். இப்போ விஷயத்தை சொல்லுங்களேன்" என்று சொல்லி அவசரப்பட்டேன்.

சிவானந்தம் சொல்ல ஆரம்பித்தார்:-

"என்னை சில நாஸ்திக நண்பர்கள் சிவப்பழம் சிவானந்தம்" என்று கூப்பிட்டுக் கேலி செய்வார்கள். உண்மையில் நான் இந்து பக்தன்தான். இந்து மதத்திற்கு களங்கத்தை உண்டு பண்ணிய பிராமணர்களைக் கண்டால் அறவே எனக்குப் பிடிக்காது. அதே நேரத்தில் இந்து மதத்தை தூஷிப்பவர்களைக் கண்டாலும் எனக்குப் 'பிடிக்காது" இந்தக் கொள்கையுடையவன் நான் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

"நடராஜ பக்தனானாலும் இப்படிக் கூட்டத்திற்குள் நான் ஒருநாளும் போனது கிடையாது. ஏதோ கூட்டமில்லாத சாதாரண நேரங்களில் போய் கோவிலை வலம் வந்து வணங்கி விட்டு வருவேன். என்பக்தி இம்மட்டோடு நின்றது. இன்று உங்களால் கூட்டத்திற்குள் வந்தேன். பெரியபாவத்தை...

"அந்தப் பாவம்" என்ற பேச்சே வேண்டாம், விஷயத்தை சொல்லுங்கள்" என்றேன்.

"பெண்கள் வேறாகவும், ஆண்கள் வேறாகவும் போகும்படி போலீஸ் பந்தோபஸ்துகள் நிறைய இருந்தும், நடராஜக்கடவுளையும், சிவகாமிசுந்தரி அம்பாளையும் ஆயிரக்கால் மண்டபத்திலிருந்து எடுத்துச் செல்லும்போது கூட்டம் மூலஸ்தானத்தை நோக்கி விரைந்து சென்றது. அப்போ ஆண் பெண் எல்லாம் கிரந்து ஒன்றாகிவிட்டது. போலீஸாரால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

"மலையிலிருந்து உருண்டு வரும் பெரியபாராங் கல்லைப்போல ஆண்களும், பெண்களும் ஒன்றுதிரண்டு மூலஸ்தானத்தை நோக்கி உருண்டு கொண்டிருந்தது. நானும் அதோடு சேர்ந்து உருண்டு கொண்டிருந்தேன்.

"முதலில் என் முன்னால் மூன்று மொட்டை பிராமணப்பெண்கள் அகப்பட்டார்கள். பிராமணர்கள் மீதுள்ள கோபத்தையெல்லாம் வைத்து அவர்கள் மீது தாக்கினேன். அவர்களை மார்பால் முண்டி அடித்து தள்ளிவிட்டு முன்னால் சென்றேன்.

"ஐந்தாறு அழகிய பெண்கும்பல் அந்தக் கூட்டத்தில் அகப்பட்டு ஆண்களையும் இடித்துத் தள்ளிக்கொண்டு சென்றது. அவர்கள் பெண்கள் என்று நினைத்து, பழி பாவத்திற்கு அஞ்சி அவர்களை இடிக்க நான் பயப்பட்டால், எனக்குப்பின் என்னை இடித்துக் கொண்டு வரும் கூட்டம் என்னைக் கொன்றுவிடும். உருண்டு வரும் மலைக்கல் என்மீது மோதும். எனவே அந்த அழகிகளை நானும் இடித்துத் தள்ள வேண்டியதாயிற்று. கூட்டம் பெலமாக இறுகியது. ஏனெனில், முன்சென்ற கூட்டம் மூலஸ்தானத்தில் போய் நின்று விட்டது. பின்னால் இருக்கும் பெருங்கூட்டம் இடித்து வந்து கொண்டே இருந்தது.

ரோஜா முத்தையா

ஆகவே கூட்டம் கருங்கல்லாக உறைந்தது. கையை அசைக்க முடியாது. வயிற்றோடு வைத்துத்தான் தள்ள வேண்டியதிருக்கிறது.

"என்வயிற்றோடு வைத்துத்தள்ளிக்கொண்டே சென்ற அவர்கள் அழகிய பெண்கள். நானும் வாலிபன்தானே! வாலிபன் தொட்டால் வாடிச் செடிபோலும்? பெண்களைத் தொட்டவுடன் ஒரு வித உணர்ச்சி உண்டாகிறது. அதுவும் பெலமாகக்கட்டித் தழுவுவது போல வயிற்றைக்கொண்டு இறுக்கித் தள்ளிக்கொண்டே போனால்...?

"கள், குடித்தால்தான் வெறி உண்டாகும்; பாம்பை, அடித்தால்தான் படம் எடுக்கும்; தொட்டால்வாடிச் செடியை, தொட்டால்தான் சுருங்கும். ஆனால் மனிதனுக்கு ஆசையோ நினைத்த மாத்திரத்தில் படம் எடுக்க ஆரம்பித்து விடுகிறது. கொஞ்சநேரத்திற்கு முன்பு 'இந்தக் கூட்டத்திற்குள் என் வந்தோம் என்ற வருத்தம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் இப்போதோ பக்க இடிகளையெல்லாம் மறந்து என்முன் நிற்கும் அழகுராணிகளை நன்றாக—ஆசைதீர—ஒரு நாளும் அனுபவிக்காத—புத்தப்புது இன்பவெறியுடன்—கோவில் என்பதையும் மறந்து—மூலஸ்தானம் செல்கிறோம் என்பதையும் மறந்து அழுத்தமாக அமுக்கிக் கொண்டே சென்றேன். அதற்குள் அப்பெண்களில் ஒருத்தி, இன்பஇடிபோதுமென்றோ, வேறொன்றை விரும்பியோ படீரென்று திரும்பினாள். அவள் இப்போ எனக்கு நேர் எதிராக நின்றாள். எப்பக்கமும் விலகிப்போக முடியாது. நான் அவளைக் கவனியாதது போல் அடிஎடுத்து வைத்தேன். முன்பைவிட இப்போது பிரத்தியட்சமாக இன்பரசம் பெருக்கெடுத்தது. எங்கள் இருவர் நெஞ்சும் ஒரு நிமிஷம் நன்றாக உராய்ந்தது. அவளும் எவ்வித கூச்சலும் போடாது, அதே மயக்கத்தில் கட்டுண்டு கிடந்தாள். என் கைகூட அவள் நெஞ்சை ருசிபார்க்க ஆசைப்பட்டது. ஆனால் கையை அசைக்க முடியவில்லை. என்றாலும் கூட்டம் என்ற நினைவு வரவே பலவந்தமாக முண்டி அடித்து விலகிச் சென்றேன். அதே நேரத்தில் இன்னொரு வாலிபக்கூட்டம் வேறு சில மாதர்பகுதிகளை மானபங்கம் செய்துகொண்டிருந்தது...இல்லை...இல்லை...மானபங்கம் செய்ய விட்டுக் கொண்டிருந்தது.

"எல்லோரும் 'துதிப்பாடல்' பாடினார்கள். நான் தூற்றுப்பாடல் பாடினேன். பக்தியின் சுயரூபத்தை உணர்ந்தேன். உடனே ஒரு நிமிஷமும் தாமதியாது ஓடிவந்தேன். இப்போ நான் செய்தது எவ்வளவு பெரிய பாவம் என்று உணர்ந்து என் உள்ளம் நிம்மதியற்று வேதனையடைகிறதே..." என்றுகூறி முடித்தார்.

"சிவானந்தம், நானும் இன்று உங்கள் நிலைக்குத்தான் ஆளாகி இருப்பேன்; ஆனால் என் கவனம் பிரகாரத்தில் கிடக்கும் அங்கஹீன அநாதைகளிடம் சென்று விட்டது. நீங்கள் செய்தது ஒன்றும் குற்றமில்லை. அந்தப் பெண்கள் இதை விரும்பி வந்தவர்களே! அம்பாள் கோவிப்பாள், நடராஜர் நரகத்தில் தள்ளிவிடுவார் என்றெண்ணி வருந்தவேண்டாம். கோவிலில் கோதையர் படும் கேவல நிலையைக்கண்டு—கோவிலில் காம உணர்ச்சி தோன்றக்கூடிய நிகழ்ச்சிகள் நிகழுவதைக்கண்டு குமுறி எழுங்கள்! நாமும் அந்த அற்ப ஆசைக்கு ஆளாகி விட்டோமே என்று வருந்துங்கள்? சினந்தெழுங்கள்! சிந்திருந்த முயலுங்கள்! பக்தியில் புரட்சிகரமான மாறுதலை உண்டு பண்ணுங்கள்!

"இனி உங்கள் பேனாமுனையை இதற்காகவே உபயோகப்படுத்துங்கள். இதுவரை ஆசையைத் தீர்க்க வசதியாய் இருந்த ஆநந்தராதரிசனக் கோவிலை, இனி அறிவுப் பசியைப்போக்கும் அரண்மனையாக்குங்கள்!" என்று கூறி முடியவும் அண்ணாமலை சர்வகலாசாலை போய் சேர்ந்தோம்.

—ஜேக்கப்.

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஜனங்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்த பின்னரும், கூடை கூடையாக மீதமிருந்ததாம். ஆனால் மனிதருக்கு அது சாத்தியமா? ஒரு சில வாக்கியங்களை எத்தனையெத்தனை விதத்தில் நீட்டியும், மாற்றியும், விரித்தும், திரித்தும், புனைந்து உரை செய்து வளர்த்துக்கொண்டே போகலாம் எனில் வளர்ச்சிக்கு இடமில்லை, ஆதாரமில்லை தளர்ச்சி ஆரம்பித்தது. கடைசியில் குறுகிய கால்கள்தான் மிச்சம். தலைகீழ்ப் பாடம் சரியாய் தலையில்பிடித்து வாலில், இல்லை, காலில் முடிந்தது.

ஆனால் உரோமர்கள் செய்து கொண்ட கற்பனை அவர்களுக்கு இதனின்றும் வெற்றியளித்தது. அவர்கள் "ஒரு பூர்ணமான நீதி நிலை" ஒரு காலத்திலிருந்தது, கண்ணுக்கெட்டாத காலத்திலேயே அது அழிந்து போய் விட்டது எனக் கற்பனை செய்து கொண்டார்கள். அது வேதங்களென்ற வாய் வழியாக வளர்ந்து வரையறுக்கப்பட்ட வாக்கியங்கள் போன்றதல்ல. அதனைக் கண்டவர் கேட்டவர் யாருமிலர். எனவே அதைக் கண்டு பிடிப்பதே தம் கடனாகக் கொண்டார்.

"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத் தூறுமறிவு" என்றாற் போல், ஒரு பூரணமான, நீதியான நிலைமையை யாதொரு கட்டுப்பாடும் வரையறைவுமின்றி, துருவித் துருவி ஆராய்ந்து தெளிய முற்பட்டனர். குறையை நீக்குவான் மீண்டும் மீண்டும் முயன்றனர். எனவே அவர்கள் கலை, மலைபோல் வளர்ந்து கொண்டே போயது. உலகம் போற்றும் தலைமை ஒரு கால் எய்தி அழியாப் புகழ் கொண்டனர்.

மக்கள், நாளாக, நாளாகப் பல்வேறு தொழில்கள் இயற்றுவாராயினர். தொழில் ஒற்றுமைப்பட்ட பல்வேறு குழுவினர் தம்முள் நெருங்கி உறவாடிப்பழகும் நேர்மைபற்றிக் கொல்லர், தச்சர், வாணியர், வக்கீல்கள் என்றாற்போல பல, பல வகுப்பினரெனப் பிரிந்தனர்.

நிலைபற்ற, தொழில்பற்றி மட்டும் தோன்றி மறையும் வகுப்பு வேற்றுமை கண்டுமயங்கி, அதைப் பெரிதாகப் பேணிய பேதைகள் சிலர் இவ்வேற்றுமையே நன்றெனக் கொண்டு, இவ்வகுப்புகளைக் காரணமாகக் கொண்டு, தொழில்களை என்றென்றும் பணிக்கலாயினர்.

தொழில் வளர்ச்சிக்கும், சிறப்பிற்கும் அவனவன் அறிவும் திறனுமே இருப்பிடம் என்பதை மறந்து, வகுப்புகளே உறைவிடமாகத் தீர்மானித்து, "தொழில் நலிவுறாமை வேண்டின் வகுப்புகள் சிதைவுறாமை வேண்டும்" எனக் கொண்டு கலப்பு மணம் செய்யாமை, சமபந்தி போஜனம் செய்யாமை, தீண்டாமை, பாராமை போன்ற இன்னோரன்ன விலக்குகளைப் புகுத்தி வகுப்புகளையும் இறக்கொணா வருணங்களென வகுத்தனர்.

"தொழில்பற்றி ஆகும் வகுப்புகள்—ஆனால் பிறப்பு எவ்வுயிர்க்கும் ஒக்கும்" என்றனர் மேலோர்.

ஆனால் இவர்களோ—எதிலும் தலைகீழ். "பிறப்பொவ்வா—வருணங்கள் வேறு வேறு"—"அவற்றை யொட்டித் தொழில்களும்

ஆம்'' என்றனர். இதுதான் வண்டியைக் கொண்டு போய் குதிரைக்கு முன்னால் கட்டுவதென்று ஆங்கிலத்தில் சொல்லுவது.

மற்றும் தொழில்கள் பற்றி வேற்றுமைகள் எழுகின்றன. "சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்''

பிறப்பினால் உயர்வு தாழ்வு சொல்லல், பாவம் என்கிறோம்.

இதிலும் தலைகீழ் பாடம் இன்று படிக்கிறார்கள். பிறப்பினால் வேற்றுமை உண்டு. யார், யார் யாது, யாது தொழில் புரியினும் சிறப்பு ஒன்றே. தொழில் பற்றி உயர்வு தாழ்வு சொல்லல் தான் பாவம், என்று மாற்றிச் சொல்லுகிறார்கள்.

யார்?

பெரிய பெரிய மகாத்மாக்கள் முதல் சொல்லுகிறார்கள். அப்பொழுது நமது தலையே மேலே தான் இருக்கிறதா என்று நமக்கே சந்தேகமுண்டாய் விடுகிறது.

எனது காதில், போதும் போதும் நிறுத்தும் தலை சுற்றுகிறது என்ற சப்தம் கேட்கிறது. இல்லை பயப்படாதீர்கள், இன்னும் ஒன்றிரண்டு தலை கீழ் நினுசுகள் (Samples). அப்புறம் பிதற்றல்கள் நின்றுவிடும். தலை கிறுகிறுப்பும் போய்விடலாம்.

பின்! ஒரே தூக்கம்!—யாருக்கு?! எனக்குத்தான்.

மணம்.

மணம் மலர் பொருந்தும் மனமன்று! மனவிருப்ப மணம். அதுதான் காதற் கலியாணமென்பது. ஆணும் பெண்ணும் ஆசையுற்றுக் கலப்பது இயற்கை. மனதொத்து நிலையாக வாழ்வது காதற் சிறப்பு. அதனை உலகினர் அறிந்து கொள்வதற்காக முடிப்பது மணவினை.

ஆண் பெண் உறவு, ஆசையில் ஆரம்பித்து மணவினையில் முடிவது இயற்கை. —ஒழுங்கு.

ஆனால் இதிலும் தலைகீழ்.

ஆண் பெண் உறவினை, ஆசையென்பதின்னதென்றுகூட தெரியாத பாலர்கள், மணவினையில் ஆரம்பிக்க வேண்டுமாம்.

ஏன்?

அது கடவுளர் தம் தெய்வத்தாற் பணிக்கப்பட்ட சடங்காம். அச்சடங்கினுக்குள் படுத்தப்பட்ட ஈருடல் ஈருயிர்கள், அவைகள் தம் தமக்குள் எத்துணை வேறுபாடுடைத்தாயினும் இவ்வுலகில் ஒன்றி வாழ வேண்டும். அன்பும் ஆசையும் காதலும் அடையவும் வேண்டுமாம். கல்லைக் கொடுப்பார்களாம், நன்றாக சமைக்க வேண்டும், உண்ணவும் வேண்டும், உண்டால் அது ஜீரணிக்கவும் வேண்டும். வாஸ்தவம், இது மக்கள் வழியன்று தெய்வீக அல்லது பைசாச மணமேயாகும்.

விதவையர்.

கொண்ட கணவரது சொத்துக்களை அவர் இறந்தபின் அடைந்த விதவையர் எவ்வளவு பகிரங்கமாக விபசாரத்தனத்தில் ஈடுபட்டாலும் அவர்களுக்கு அச்சொத்துகளிலுள்ள உரிமைகள் ஒரு சிறிதும் குறைவதில்லை. ஆனால் அவர்கள் மறுமணம் செய்து கொண்டாலோ சொத்துக்கள் அனைத்தையும் இழந்துவிடுகின்றனர்.

விதவைகளின் விபசாரதனத்திற்கு இத்தனை தூண்டுதலா!

ஆனால் மணவினைச் சடங்கொன்றே, மனைவியாம்பெற்றியை தருமெனக் கொள்வோர், மறுமணச் சடங்கொன்றே அதனைப் போக்குமென்று கொள்வதில் வியப்பொன்றுமில்லை.

தனயர்களின் சொத்துக்களை தாய்மார்கள் வாரிசாக அடைந்து கொள்வதில் அவர்கள் 1. விதவை தன்மையோ, 2. விபசாரத்தன்மையோ, 3. அச்சொத்துக்களை அடைந்த பின்னோ, முன்னோ மறுமணம் செய்து கொள்வதோ, எவ்விதமும் பாதிப்பதில்லை.

ஆனால் விதவையர்க்கு மறுமண உரிமையை கொடுத்து அவருடைய துயரம் துடைக்க வந்த மறுமணச் சட்டமோ, புருடனை இழந்த தாய்மார்கள் தம்மக்களின் சொத்துக்களை அடைந்த பின்னர் மறுமணம் செய்து கொண்டால், அந்த நிமிடத்திலேயே சொத்துக்களை இழந்துவிடுவார்கள் என்று கட்டளையிடுகிறது.

ஆனால் சொத்துக்களை அவ்விதம் அடையும் முன்னரே விதவைத் தாய்கள் மறுமணம் செய்து கொண்டிருந்தால், மக்களின் சொத்துக்களை வாரிசாக அடைந்து கொள்வதில் எவ்வித தடையுமின்றி இன்றும் அடைந்து வருகிறார்கள்.

விதவைகளை முன்னேற்ற வந்த போலி முற்போக்கர்கள் புதிதாகச் சில தளைகளைப் புனைந்து விதவைகளுடைய விலங்குகளைப் பலப்படுத்தினர். இது அன்னார் தம் பிற்போக்கன்றி வேறென்ன.

அப்பப்பா! என்ன கொடுமை! என்ன கூற்று! என்ன புரட்சி! எல்லாம் தலைகீழ். இந்த உலகம் வேண்டவே வேண்டாம். கயிற்றை சுருக்கு போட்டு இறந்துவிடலாமென்றால் தலைகீழ் உலகமாயிற்றே!

மற்றொரு பெரிய புரட்சி! ஒரு பெரிய பூகம்பம் வேண்டும்.

எதற்கு? உலக அழிவுக்கா?

இல்லை. இல்லை. தலைகீழ் உலகத்தை தலைமேலாக்கி, அறிவும் அன்பும் மீண்டும் உலகில் நிலைபெறுவதற்கு

"பகுத்தறிவு''

யாரால்?

✯

ஆழ்வார்கள், அவதார புருஷர்கள், நாயன்மார்கள், நபிகள், தேவகுமாரர்கள் என்பவர்கள் கடவுளால் அனுப்பப்பட்டவர்கள் என்றால்; அயோக்கியர்கள், பொய்யர்கள், திருடர்கள், கொலைகாரர்கள், நம்பிக்கை துரோகம் செய்கிறவர்கள், வன்னெஞ்சகர்கள், சோம்பேறிகள், ஊரார் உழைப்பில் வயிறு வளர்ப்பவர்கள், மூடர்கள் என்பவர்கள் யாரால் அனுப்பப்பட்டவர்கள்?

—ஈ. வெ. ரா.

திரிவேணி மூலிகை.

காக்காய் வலிப்பிற்குக் கைகண்ட மருந்து.

வலிப்பு ஏற்பட்டதும் முகர்ந்தால் குணமாகி விடும். முகர்ந்தபின் 1¼ அங்குல நீளமுள்ள கருப்புப் புழுச் செத்து தும்மலுடன் வெளியேவரும். அற்புதமான முறையில் நோயாளி குணமடைவார். ஆங்கிலத்திலாவது இந்தியிலாவது எழுதவும்.

Mahatma Audhut Baba
Dandat Ban P. O.
Chitrakot U. P.

அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர் என். கரிவரதசாமி. தமிழன் அச்சகம். 59. கச்சேரி வீதி, ஈரோடு.